வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk
மலர் : 04
10.05.2023 புதன்கிழமை
இதழ் : 152
பக்கங்கள் : 16



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

## கிணற்றில் வீழ்ந்து குழந்தை மரணம்!

யாழ்ப்பாணம், மே 10
வீட்டு வளவில் இருந்த பாதுகாப்பற்ற கிணற்றில் தவறி விழுந்து இரண்டரை வயது குழந்தை ஒன்று உயிரிழந்தது.
இளவாலை - வசந்தபுரம் பகுதியில் நேற்று பகல் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் கருணாநிதி ரக்ஷிகா என்ற பெண் குழந்தையே உயிரிழந்தது.

15

## வடக்கு, கிழக்கு தமிழ் எம். பிக்களை ஒன்றாகவே ஜனாதிபதி சந்திப்பார்!

### அதிகார பகிர்வு, தமிழர் பிரச்னைகள் தொடர்பில் இரு நாட்கள் பேச முடிவு!

கொழும்பு, மே 10
வடக்கு, கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சகலரையும் ஒன்றாக சந்தித்துப் பேசுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.
இரா. சம்பந்தன் தலைமையிலான இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை நேற்று செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசியபோதே இந்த இணக்கத்தை அவர் வெளிப்படுத்தினார்.
நேற்றைய சந்திப்பில், வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பூர்வீக தாயகம். எனவே, அரசியல் தீர்வு - அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் பேசும் போது இரு மாகாணங்களின் பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஒருசேர சந்தித்து பேச்சு நடத்த வேண்டும் என்று இரா. சம்பந்தன் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிடம்

15



இறுதிப் போரின்போதான தமிழின படுகொலையை நினைவுகூரும்முகமாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் நேற்று வல்வெட்டித்துறையில் ஆரம்பமானபோது தாயார் ஒருவர் வாங்கி அருந்தும் காட்சி...!

### ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர்:

# இந்திய தூதுவரை சந்தித்து தமிழரசு கட்சியினர் பேச்சு!

கொழும்பு, மே 10
ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர் இலங்கை தமிழரசு கட்சியினர் இந்திய உயர்ஸ்தானிகரகத்துக்கு சென்று தூதுவர் கோபால் பாக்லேயை சந்தித்துப் பேசினர்.
தமிழரசு கட்சியின் பெருந்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன், இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் ஆகியோரே இந்தியத் தூதுவரை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.
இதன்போது, ஜனாதிபதியுடனான சந்திப்பு தொடர்பில் இந்திய தூதரகத் தரப்பு ஆவலுடன் கேட்டறிந்து கொண்டனர் என்று தெரிய வருகின்றது.

15

## முள்ளிவாய்க்கால் கஞ்சி யாழில் வழங்கப்பட்டது!

யாழ்ப்பாணம், மே 10
முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையை நினைவுகூரும் முகமாக யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் வழங்கப் பட்டன.
நேற்று செவ்வாய்க்கிழமை காலை வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இல்லம் அமைந்திருந்த ஆலடிப் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு ஆரம்ப மானது.
இதன் பின்னர்,

15

## துப்பாக்கி சூடு நடத்தியதாலேயே சஜித் அணியின் வீடுகள் தப்பின!

### நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, மே 10
கடந்தாண்டு மே மாதம் 10ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட 100 வீடுகளுக்கு தீ வைக்க திட்டமிடப்பட்டதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
வன்முறையாளர்களை



கண்டால் சுடுவதற்கு ஆயுதப்ப படையினருக்கு உத்தரவிடப்பட்டதால் இந்தத் திட்டம் முறியடிக்கப்

15

## பௌத்த சின்னங்களின்மீதே சிவலிங்கங்கள் உள்ளனவாம்!

### சிங்களவர் பொறுமைக்கும் எல்லை உண்டாம் என்கிறார் சரத் வீரசேகர!

கொழும்பு, மே 10
நாட்டில் உண்மையில் இனப்பிரச்னை என்பது உள்ளதா என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் தலைமைகளுடன் பேச்சில் ஈடுபட முன் ஆராய வேண்டும்.
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த சின்னங்கள் அழிக்கப்பட்டு அவற்றின்மீது சிவலிங்கம், விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. சிங்களவர்களின் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு, பொறுமையை சோதிக்க வேண்டாம் என்று பாராளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர கூறியுள்ளார்.
நேற்று பாராளுமன்றத்தில் பேசிய போதே அவர்

15

## பயங்கரவாத சட்டம் தொடர்பில் ஐ. நா. அறிக்கையாளர்கள் கடிதம்!

### ஜனாதிபதி ரணிலுக்கு அனுப்பினர்

கொழும்பு, மே 10
பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் புனர்வாழ்வு சட்டமூலம் தொடர்பான பிரச்னைகளை முன்வைத்து ஐக்கிய நாடுகள் சபையின் 10 விசேட அறிக்கையாளர்கள் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.
10 விசேட அறிக்கையாளர்கள் கையொப்பமிட்ட அந்தக் கடிதத்தில், சர்வதேச விதிமுறைகளுக்கு இணங்க பயங்கரவாதத்துக்கான பொருள் கோடலை பயன்படுத்துவது, உண்மைத்தன்மை-சட்டபூர்வத்தன்மையை உறுதி செய்தல், எதேச்சையான முறையில் சுதந்திரம் பறிக்கப்படுவதை தடுத்தல், தடை செய்வதற்கான ஏற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை

15

## இலங்கைக்கான கடன் வசதியை ஓர் ஆண்டுக்கு நீடித்தது இந்தியா!

கொழும்பு, மே 10
இலங்கைக்கான 100 கோடி டொலர் கடன் எல்லை வசதியை இந்தியா ஒரு வருடத்துக்கு நீட்டித்துள்ளது என திறைசேரியின் பிரதி செயலாளர் பிரியந்த ரத்நாயக்கா தெரிவித்துள்ளார்.
கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் நிதி நெருக்கடியின் உச்சக்கட்டத்தில் இருந்தபோது இலங்கைக்கு இந்தியா சுமார் 400 கோடி டொலர் பெறுமதியான அத்தியாவசிய உதவிகளை கடன் எல்லை வசதியாக வழங்

15

## தமிழர்களின் குடிப்பரம்பலை அழிப்பதை இனவாத அரசு உடன் நிறுத்தவேண்டும்!

### பாராளுமன்றத்தில் சிறீதரன் எம். பி.

கொழும்பு, மே 10
வடக்கு, கிழக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக நிலங்களை அதிகார கரங்களால் வலிந்து பறித்தெடுத்து, அந்த நிலங்களில் பௌத்த விகாரைகள் அமைத்தல், இரா



ணுவ முகாம்களை கட்டமைத்தல், சிங்கள குடியேற்றங்களை உருவாக்குதல், சீனா உள்ளிட்ட நாடுகளின் வர்த்தக நடவடிக்கைகளுக்காக அவற்றை வழங்குதல் என்பவற்றின்

15

## விபத்தில் இளைஞர் பலி!

கிளிநொச்சி, மே 10
புளியம் பொக்கணையில் வேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் மாடுகளுடன் மோதுண்டதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயங்களுக்கு இலக்கா

15

## இப்படியும் நடக்கிறது...!

ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையே அரசியலில் நீண்டகால போட்டி நிலவியது. ஆனாலும் இருவரில் யார் பதவியில் இருந்தாலும் ஒருவர் மற்றையவரைப் பாதுகாக்கிறார் என்ற குற்றச்சாட்டும் உண்டு.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது, ரணில் எதிர்க்கட்சித் தலைவர். அதே வேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர். அவரின் தலைமைக்கு எதிராக சஜித் பிரேமதாஸ சில வருடங்களுக்கு முன்னர் கட்சிக்குள் ஒரு பெரும் போராட்டத்தை ஆரம்பித்தபோது, (இப்போதும் அப்படித்தான் ரணிலுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியை ஆரம்பித்தார். ஆனால், இது அதற்கு முதல் கட்சி தலைமையை கைப்பற்றுவதற்காக நடந்தது.) ஜனாதிபதியாக இருந்த மகிந்த அவரைப் பாதுகாக்க பல உதவிகளை செய்தார் என்று கூறப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவை சஜித் ஆதரவாளர்கள் ஒரு தடவை முற்றுகையிட முயன்றபோது அவர்கள் தலைமையகத்தை நெருங்கவிடாமல் ஆயுதப்படைகளைக் கொண்டு தடுப்பதற்கு ஜனாதிபதி மகிந்த உத்தரவிட்டார் என்றும் அப்போது அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

இதேபோலத்தான், மகிந்த அரசாங்கத்தை வீழ்த்துவதற்காக மைத்திரியை பிரித்தெடுத்து ஆட்சியைக் கைப்பற்றி - தமது அரசாங்கத்துக்கு 'நல்லாட்சி' அரசாங்கம் என்று பெயர் வைத்தவர் ரணில். ஆனால், ஆட்சியைப் பிடிப்பதற்காக தேர்தல் பிரசாரத்தில் மகிந்தவின் ஊழல்களைப் பட்டியலிட்டு, நாட்டின் வளங்களை அவர்கள் சூறையாடி விட்டனர் எனவும் பல பில்லியன் டொலர்களை நாட்டுக்கு வெளியே பதுக்கி வைத்திருக்கின்றனர் என்றும் குற்றஞ்சாட்டி- ஆட்சியைப் பிடித்த ரணில், பின்னர் அவர்கள் செய்த ஊழல்களுக்காக தண்டிக்காமல் அவர்களைப் பாதுகாக்கின்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

ஆக, மகிந்த ஆட்சியில் இருக்கும்போது அவர் ரணிலை பாதுகாத்தார் எனவும் ரணில் ஆட்சியில் இருக்கும்போது மகிந்தவை பாதுகாத்தார் என்றும் பரவலான குற்றச்சாட்டுகள் உண்டு.

அதிகம் ஏன், 'அறகலய' போராட்டக்காரர்கள் ராஜபக்ஷக்களின் ஆட்சிக்கு எதிராகத் திரண்டு அவர்களை வீட்டுக்கு அனுப்பியதும் ரணில் அதிகாரத்துக்கு வந்த பின்னர், அவர் ராஜபக்ஷக்களை பாதுகாக்கிறார் என்றும் இன்றும் கூறப்பட்டு வருகின்றது.

இந்த சம்பவங்களை அறிகின்றபோது அதில் உண்மை இருப்பதாகவே நாமும் நம்ப வேண்டியிருந்தது.

அண்மையில், தனது வீட்டில் நடந்த ஒரு விருந்து வைபவம் ஒன்றில் மகிந்தர் இதுபற்றி தனது நண்பர்களுடன் நீண்ட நேரம் மனம்விட்டு பேசியிருக்கின்ற செய்தி தென்னிலங்கை ஊடகங்களில் இப்போது பரபரப்பாகப் பேசப்பட்டு வருகின்றது.

அந்த வைபவத்தில் தன்னுடனிருந்த பழைய நண்பர்கள் சிலருக்கு, 'நான் அரசியலில் இருக்கின்ற ஆரம்ப காலம் முதல் ரணில் விக்கிரமசிங்க பற்றி எச்சரிக்கையாகவே இருந்திருக்கின்றேன். அவரே நமது பிரதான எதிரி என்று நான் சொல்கின்ற போதெல்லாம் உங்களில் பலர் அதனை நம்பவும் இல்லை. எனது கருத்தை சீரியஸாக எடுக்கவும் இல்லை. அதிகம் ஏன், ரணில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தால்தான் நமக்கு நல்லது என்றுகூட நீங்கள் அடிக்கடி சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், நான் அதனை எப்போதுமே நம்பவில்லை என்பதும் உங்களுக்குத் தெரியும்.' என்றிருக்கிறார்.

அப்போது கூடஇருந்த அவரின் நண்பர்களுக்கு ஆச்சரியம். ஏன் அவர் இப்படி சொல்கிறார் என்பது தெரியாமல் அவர்கள் இருக்க, அவர்களில் ஒருவர் சொன்னாராம், 'இப்போது அவர் நமக்கு எதிரணியில் இல்லைத்தானே. அவரே நம்முடன்தானே இருக்கிறார்' என்று.

இதனைக் கேட்ட மகிந்த கோபத்துடன், 'இப்போதுகூட நீங்கள் ரணில் விக்கிரமசிங்க பற்றி தவறான கண்ணோட்டத்தில்தான் இருக்கிறீர்கள்' என்றாராம்.

கடந்த தேர்தலில் ரணில் படுதோல்வி அடைந்த பின்னர், தமது பிரதான அரசியல் எதிரியாக சஜித் உருவெடுத்துவிட்டார். அவர் நாமலின் அரசியலுக்கு வில்லங்கமாக இருப்பார் என்றே மகிந்த நினைத்துக் கொண்டிருக்கிறார் என்றே அவரின் சகாக்கள் நினைத்துக் கொண்டிருந்தனர்.

பின்னர், மகிந்தரின் ஆதரவுடன் ஆட்சியைப் பிடித்த ரணில் இன்றுவரை மகிந்தவின் பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவுடனேயே ஆட்சியில் தொடர்ந்து கொண்டிருக்கின்றார்.

மகிந்த இப்போது ஆட்சியில் இல்லாவிட்டாலும் மகிந்தவின் ஆட்சியே தொடர்கின்றது என்றுதான் எதிரணியினரும் தொடர்ந்து கூறிக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால், அந்த சந்திப்பில் மகிந்தர் சொன்ன கடைசி வார்த்தை அவர்களுக்கு ஆச்சரியத்தை தந்ததாம்.

'இப்போது பார்த்தீர்களா? ராஜபக்ஷக்களை ஆட்சியில் இல்லாமல் செய்துவிட்டது மாத்திரமல்ல - ரணில் நமது கட்சியையே பல்வேறு பிரிவுகளாக பிரித்து - கட்சியையே இல்லாமல் ஆக்கிவிடுவார் போல இருக்கின்றது!'.

அந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட முக்கிய தலைவர் ஒருவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் இந்தச் செய்தியை சொன்னதாக தெற்கு ஊடகம் ஒன்றில் வந்த செய்தியைப் படித்தபோது எமக்கும்தான் ஆச்சரியம்.

**- ஊர்க்குருவி**

# மன்னாரில் சிறுவர் கடத்தல் முயற்சி; பாடசாலைகளுக்கு விசேட பாதுகாப்பு

*மன்னார், மே. 10*

மன்னாரில் கடந்த சில நாட்களாக சிறுவர்களை இலக்கு வைத்து கடத்தல் முயற்சிகள் இடம்பெறுவதாகவும் கடந்த சனிக்கிழமை மற்றும் திங்கட்கிழமை மக்கள் நடமாட்டம் குறைந்த பாதை வழியாக பயணித்த இரு சிறுவர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கிக் கடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த விடயம் மாவட்ட அரசாங்க அதிபர், வலயக்கல்வி பணிப்பாளர், மன்னார் பொலிஸார், இராணுவத்தினரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை மன்னாரில் உள்ள பாடசாலைகளுக்கு விசேட இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் பொலிஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

அதேநேரம் அதிகளவான பெற்றோர்களும் பிள்ளைகளுடன் பாடசாலைக்கு வருவதையும் மாணவர்கள் குழுக்களாக பயணிப்பதையும் வீதிகளில் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

குறித்த கடத்தல் முயற்சி தொடர்பில் திங்கட்கிழமை மன்னார் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் குறித்த கடத்தல் கும்பல் மற்றும் வாகனம் தொடர்பாக மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஒரு வகுப்பில் 40 மாணவர்கள் என்பது முட்டாள்தனமானது!

*யாழ்ப்பாணம், மே 10*

ஒரு வகுப்பில் நாற்பது மாணவர்களுக்கு மேல் அனுமதிப்பது என்பது முட்டாள்தனமானது. இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில், அந்த சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

பாடசாலையின் ஒரு வகுப்பில் 40 மாணவர்களும் அதற்கு மேலும் மாணவர்களை அனுமதித்தல் என்னும் கல்வி அமைச்சின் முடிவானது முட்டாள்தனமானது. இதனால், கிராமப்புற பாடசாலைகள் ஆயிரக்கணக்கில் மூடப்படும். மாணவர்களும் பெற்றோர்களும் நகர்புறம் நோக்கி படையெடுக்கும் நிலை உருவாகும். கிராமங்களின் நிலவளம், தொழில்வளம், சமய சமூக கலாசார பண்பாட்டு விழுமியங்கள் முற்றாகக் கைவிடப்படும்.

மாணவர்களின் நடத்தைக் கோலங்கள் மாற்றமடையும். வகுப்பறை அளவுகள் போதாமையால் உளவியல் ரீதியாக மாணவர்கள் பாதிக்கப்படுவர். ஆசிரியர்களின் பணிச்சுமை அதிகரித்து மாணவர்களை கண்காணித்து கற்பிக்கும் சூழ்நிலை பாதிக்கப்படும். ஆசிரியத் தொழிலுக்கு இனி மேல் எவரும் உள்வாங்க முடியாத நிலை ஏற்படும்.

இவ்வாறான பாதகமான சூழ்நிலைகள் பல இருந்தும் அரசாங்கம் இத்தகைய முடிவினை எவருடனும் கலந்தாலோசிக்காமல் எடுத்திருப்பது முட்டாள்தனமான செயல்பாடு. உலக நாடுகளிடம் கடனைப் பெறுகிறோம் என்பதற்காக உலக நாடுகளில் உள்ள கல்வி கொள்கைகளையும் வகுப்பறை நடைமுறைகளையும் புறந்தள்ளி இதனை நடைமுறைப்படுத்துவது ஆபத்தானது.

கல்வியால் உயர்ந்துள்ள பின்லாந்து நாட்டில் ஒரு பாடசாலையில் கற்கும் மாணவர் தொகை 600ஐ விட அதிகரிக்க முடியாது. அதிகபட்சம் 600 பேர் மாத்திரமே ஒரு பாடசாலையில் கல்வி கற்கலாம்.

வகுப்பறை ஒன்றில் அதிகபட்ச மாணவர் தொகை 26 ஆகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆயினும், பெரும் பாலான பாடசாலைகளின் வகுப்பறைகளில் சாராசரி மாணவர் தொகை 20 ஆகவே காணப்படுகின்றது.

இலங்கையில் இப்போதுள்ள சூழ்நிலையில் இருபது மாணவர்களை வைத்துக்கொண்டே ஆசிரியர்கள் படும் அவஸ்தை சொல்லில் வடிக்க முடியாதவை. இந்த இலட்சணத்தில் 40 மாணவர்களை பதினைந்துக்கு இருபது அல்லது அதற்கும் குறைவான அளவுகளைக் கொண்ட வகுப்பறைகளுக்குள்ளே ஆறு மணிநேரம் அடைத்து வைத்து கல்வி புகட்டுவதால் எத்தகைய விளைவுகள் ஏற்படும் என்பதனை ஒவ்வோர் ஆசிரியரிடமும் முதலில் அறியவேண்டும்.

"ஆயிரம் பாடசாலைத்திட்டம்", "அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" என்பதெல்லாம் எதற்கு என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் கேள்விகளாக முன்வைத்துள்ளது. இதுபோன்ற சுற்றறிக்கைகளையும், தாபன விதிக்கோவைகளையும் நியமன நடைமுறைகளையும் மீறிய செயல்பாடுகள் கல்விப்புலத்தில் நிறையவே நடைபெறுகின்றன.

ஒரு மாவட்ட அரசாங்க அதிபரின் கணவர் என்பதற்காக அவர் ஓய்வுபெற இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் புதிய பாடசாலை ஒன்றுக்கு அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இது வடக்கில் நடந்துள்ள புதுமை. அந்தப் பாடசாலை உள்ள கல்வி வலயத்தில் பல பாடசாலைகளுக்கு அதிபர்களே இல்லை. குறித்த பாடசாலைக்கு நியமிக்கக்கூடிய பல அதிபர்கள் இருந்தும் அரசாங்க அதிபரின் கணவர் என்பதற்காக அவரை அதிபராக நியமித்திருப்பது நிர்வாக சேவையிலும், கல்வி நிர்வாக சேவையிலும் இருப்பவர்களை மிகவும் கீழ்த்தரமாக மதிப்பிடும் செயல்பாடாக இது பார்க்கப்படுகின்றது.

இப்படி உயர்நிலையில் இருப்பவர்கள் தவறாக நடந்தால் மற்றவர்களை எவ்வாறு வழிப்படுத்த முடியும். இத்தகைய செய்திகளை ஊடகங்கள் வாயிலாக ஒட்டுமொத்தச் சமூகத்துக்கும் தெரிவிக்க வேண்டிய கடமை எமக்கு உள்ளது. இதுபோன்ற பல சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. - என்றுள்ளது. (ஐ-03)

## இன்னிசை நிகழ்வு

*வடமராட்சி, மே 10*

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த சைவ சமய நிகழ்வு மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பக்கவாத்தியங்கள் சகிதம் இன்னிசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

நாட்டில் கோவிட் தொற்று பரவ ஆரம்பித்ததை அடுத்து இந்த நிகழ்வு இடைநிறுத்தப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

## இரத்த தான முகாம் இன்று

*யாழ்ப்பாணம், மே 10*

வேலணை பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இரத்ததான முகாமில் குருதிக் கொடையாளர்களையும் மற்றும் ஆர்வலர்களையும் தவறாது கலந்து கொண்டு இரத்ததானம் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

## வாசிகசாலையை இயக்குகின்றது ஓட்டோ சங்கம்!

*வடமராட்சி, மே 10*

வல்வெட்டித்துறை நகரத்தில் வாசிகசாலை ஒன்றை வல்வெட்டித்துறை முச்சக்கர வண்டி நடத்தி வருகின்றது.

வல்லை - உடுப்பிட்டி வீதியில் எரிபொருள் நிலையத்துக்கு அண்மையாக உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இந்த வாசிகசாலை இயங்கி வருகிறது.

யாழ்ப்பாணம், தேசிய அளவில் வெளியாகும் அனைத்து நாளிதழ்களும் பொதுமக்கள் வாசிப்பதற்காக இங்கு வைக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ- 02)

Eelanadu
10.05.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 27

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பொதுக் கட்டமைப்பை ஆதரிப்பதே சரியானது?

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் மீண்டும் சச்சரவுகளுக்கான அறிகுறி தெரிகின்றது. குழப்பங்களை விளைவிக்க வேண்டாமென்று பல்கலைக்கழக மாணவர்கள் அறிவித்திருக்கின்றனர். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) கட்சியின் செயல்பாடுகளை கருத்தில்கொண்டே இவ்வாறான பிரச்னைகள் எழுவதுண்டு. கடந்த காலத்தில் முள்ளிவாய்க்காலுக்கு சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களோடு முரண்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு.

கடந்த 14 வருடங்களாக, நினைவேந்தல் நிகழ்வுகள் தொடர்ந்தும் கட்சி அரசியல் மயப்படுத்தப்பட்டே வந்திருக்கின்றது. திலீபன் நினைவேந்தலின்போதும் இவ்வாறான பிரச்னைகள் ஏற்பட்டன. பின்னர் பூபதி நிகழ்வின்போதும் இவ்வாறான பிரச்னைகள் ஏற்பட்டன. இவ்வாறு பிரச்னைகள் ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களின்போதும் அங்கு காங்கிரஸ் கட்சியினர் தொடர்புபடுகின்றனர்.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கான பொதுக்கட்டமைப்பு என்னும் சிந்தனை உருவானது. இந்தக் கட்டமைப்புக்கு அனைத்து கட்சிகளும் ஆதரவு வழங்குவதுதான் சரியானது. நினைவேந்தல் ஒரு குறித்த கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்குமாயின் அங்கு நிச்சயம் தேர்தல் நோக்கமே மேலோங்கியிருக்கும். காங்கிரஸ் கட்சியை பொறுத்தவரையில், அவர்களோ தங்களை விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியாகக் காண்பிக்க முற்படுகின்றனர். அந்த இடம் மற்றவர்களால் பறிபோய்விடுமோ - என்னும் அச்சத்தின் அடிப்படையிலேயே அவர்களின் செயல்பாடுகள் அமைந்திருக்கின்றன. அவ்வாறு அச்சப்படவில்லையாயின், பொதுக் கட்டமைப்புடனும் பல்கலைக்கழக மாணவர்களுடனும் இணைந்து செயல்படுவதில் அவர்கள் பின்நிற்க வேண்டியதில்லை.

நினைவேந்தல்கள் என்பது மக்களுக்குரியது. அதற்கு பொதுவானதோர் அமைப்பு அல்லது சிவில் சமூக பிரதிநிதிகள் குழுவொன்றே தலைமையேற்க வேண்டும். போட்டி மனப்பான்மையுடன் அதனை முன்னெடுப்பது தவறானது. ஏனெனில், நினைவேந்தலின்போது, உரிமை கோரும் பிரச்னை கட்சி நலனிலிருந்தே எழுகின்றது. ஆனால், யுத்தத்தில் இறந்தவர்களுக்கான நினைவேந்தலில் போட்டி மனப்பான்மை இருக்குமாயின் அதற்காக ஒட்டுமொத்த தமிழ் சமூகமும் வெட்கித் தலைகுனிய வேண்டும். இதேவேளை, புலம்பெயர் அமைப்புகளும் பொதுக் கட்டமைப்புக்கே தங்களின் ஆதரவை வழங்க வேண்டும். தாங்கள் விரும்பும் கட்சிகளின் அல்லது நபர்களின் மூலம் நினைவேந்தல்களை முன்னெடுக்கக் கூடாது.

யுத்தத்துக்கு பின்னரான கடந்த 14 வருடங்களில், தமிழ்த் தேசிய அரசியலின் நிலை கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகவே தொடர்கின்றது. எந்தவொரு முன்னேற்றத்தையும் எந்தவொரு கட்சியும் காண்பிக்கவில்லை. தாங்கள் கூறும் விடயங்களுக்கான ஆகக் குறைந்த, அர்ப்பணிப்பைக்கூட கட்சிகள் நிரூபிக்கவில்லை. கட்சியின் ஆதரவாளர்கள் சிலரை இணைத்துக்கொண்டு, அவ்வப்போது புதிதாக கட்டப்பட்ட விகாரைகளுக்கு முன்னால் நிற்பதைத் தவிர, கட்சிகளின் பக்கத்திலிருந்து எதுவும் நிகழவில்லை.

ஒற்றையாட்சியை எதிர்க்கின்றோம் - 13ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்க்கின்றோம் என்றவாறான சுலோகங்களுக்கு அப்பால் தாங்கள் கூறுவதை அடைவதற்காக முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் என்னவென்று கேட்டால் எவரிடமும் பதிலில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் ஆகக்குறைந்தது யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கான நினைவேந்தல்களைக்கூட - ஒற்றுமையாகவும் நாகரிகமாகவும் முன்னெடுக்க முடியவில்லை.

# ‘பேசு தமிழா பேசு’ பேச்சு போட்டி; இலங்கையின் ஹறிகரன் முதலிடம்!

*யாழ்ப்பாணம், மே 10*

*சர்வதேச அளவிலான பேசு தமிழா பேசு பேச்சு போட்டியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த மோகன்ராஜ் ஹறிகரன் முதலிடத்தைப் பெற்று சாதித்துள்ளார்.*

*‘வணக்கம் மலேசியா’ தொலைக்காட்சியின் ஏற்பாட்டில் தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தின் அனுசரணையில் நடைபெற்ற அனைத்துலக ‘பேசு தமிழா பேசு’ போட்டியில் 12 நாடுகளை சேர்ந்த 48 போட்டியாளர்கள் பங்கேற்றிருந்தனர்.*



*இதில், இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தை சேர்ந்த நான்காம் ஆண்டு மாணவன் மோகனராஜ் ஹறிகரன் பங்கேற்றிருந்தார்.*

*ஆறாவது தொடராக நடைபெற்ற இந்தப் பேச்சுப் போட்டி நிகழ்நிலை வாயிலாக நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டி கடந்த ஏப்ரல் 29ஆம் திகதி நடைபெற்றது. இதில், மோகனராஜ் ஹறிகரன் முதலாம் இடத்தைப் பெற்று சர்வதேச பேசு தமிழா பேசு போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை தன் வசமாக்கினார். (ஐ)*

# காரைநகர் இந்து மாணவர்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்!

*யாழ்ப்பாணம், மே 10*

*காரைநகர் இந்துக் கல்லூரிக்கு முன்பாக பாடசாலை மாணவர்களை மையப்படுத்தி முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.*

*தமிழினத்தின் வலிகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்லும் நோக்கில் முள்ளிவாய்க்கால் கஞ்சி தொடர்பான துண்டுப்பிரசுரமும் இதன்போது விநியோகிக்கப்பட்டது.*

*முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையை நினைவு கூரும் முகமாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் யாழ்ப்பாணத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. எதிர்வரும் 15ஆம் திகதி வரை வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம் எங்கும் இந்த செயல்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)*



# கதிரமலை சிவன் ஆலய பெருந்திருவிழா ஆரம்பம்!


*யாழ்ப்பாணம், மே 10*

*சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த ஞாயிற்றுக் கிழமை மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.*

*தொடர்ந்தும் 13 தினங்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத் திருவிழாவும், 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை சப்பை ரதத் திருவிழாவும், 17 ஆம் திகதி புதன்கிழமை கிருஷ்ண கந்தோற்சவத் திருவிழாவும், 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 09 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும், அன்றைய தினம் இரவு கொடி இறக்கமும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)*



## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**மே - 10 புதன்கிழமை**
**சோபகிருது வருடம் - சித்திரை 27**
**நல்ல நேரம் : 09.00 - 10.30**
**ராகு காலம் : 12.00 - 01.30**
**திதி : பஞ்சமி**




**மேடம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் புது சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் தெளிவான முடிவுகளை எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். வேலையாட்களிடம் தொழில் ரகசியங்களை சொல்லி கொள்ள வேண்டாம். எச்சரிக்கை நாள்.

**மிதுனம்**
உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் அமையும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். தன்னம்பிகை துளிர்விடும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வார்கள். புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். தொட்டது துலங்கும் நாள்.

**சிம்மம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளி போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**துலாம்**
திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் கமிஷன், உத்தியோகத்தில் உங்களின் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**விருட்சிகம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்று கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். மனசாட்சிப்படி செயல்பட வேண்டிய நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் நான்கு, வியாபாரத்தில் புது முயற்சிகளை தவிர்க்கவும். மற்றவர்களின் குறைகளில் கவனம் செலுத்த வேண்டாம். எதிர்பார்ப்பு தாமதமாக முடியும் நாள்.

**மகரம்**
இன்றைய தினம் வேலைச்சுமையால் நீங்கள் சோர்வு அடைவீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். ஊழியர்களிடம் விட்டு கொடுத்து போவது நல்லது. கவனமுடன் செயல்பட வேண்டிய நாள்.

**கும்பம்**
புதிய கோணத்தில் யோசித்து பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். பெருந்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டிய நாள்.

**மீனம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர், வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். உங்களின் எண்ணங்கள் நிறைவேறும் நாள்.

# அ. தி. மு. க. - பா. ஜ. க. கூட்டணி; ஓ. பி. எஸ்., தினகரனுக்கும் இடம்!

## பாரதிய ஜனதா கட்சி புதிய வியூகம்

சென்னை, மே 10

பாராளுமன்ற தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. இதில், தமிழகத்தில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்து போட்டியிடுவதை பா.ஜ.க. தலைவர்கள் உறுதி செய்துள்ளனர்.

கடந்த பாராளுமன்ற தேர்தலின்போது பா.ஜ.க. அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் இடம் பெற்று 5 இடங்களில் மட்டுமே போட்டியிட்டது. ஆனால், இந்த தடவை அதிக இடங்களில் போட்டியிட வேண்டும் என்பதில் பா. ஜ. க. தலைவர்கள் உறுதியாக உள்ளனர். தமிழகத்தில் கூட்டணிக்கு அ.தி.மு.கதான் தலைமை வகிக்கும் என்பதை ஏற்றுள்ள பா. ஜ. க. தலைவர்கள் கூட்டணியை வலுவாக அமைக்க வேண்டும் என்பதிலும் தீவிரம் காட்டி வருகிறார்கள்.

இதற்காக புதிய வியூகம் ஒன்றை வகுத்துள்ளனர். அதன்படி கூட்டணி கட்சிகளுடன் இணைந்து அ.தி.மு.க.விடம் தொகுதிகளை கேட்க தீர்மானித்துள்ளனர். தமிழகம், புதுச்சேரியில் மொத்தம் உள்ள 40 தொகுதிகளில் சரிபாதியாக 20 தொகுதிகளில் அ. தி. மு. க. போட்டியிட வேண்டும். மீதமுள்ள 20 தொகுதிகளை கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்க வேண்டும் என்று பாரதிய ஜனதா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

அந்த 20 தொகுதிகளை தாங்கள் பிரித்துக் கொள்வதாகவும் தமிழக பாரதிய ஜனதா தலைவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். அ.தி.மு.க.விடம் கேட்கும் 20 தொகுதிகளில் 13 தொகுதிகளில் தங்கள் வேட்பாளர்களை நிறுத்த பாரதிய ஜனதா திட்டமிட்டு உள்ளது.

மீதமுள்ள 7 தொகுதிகளை தங்களது கூட்டணி கட்சிகளுக்கு கொடுக்க பா. ஜ. க. திட்டமிட்டுள்ளது. ஓ.பி.எஸ். அணி, அ. ம. மு. க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன், த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன், புதிய தமிழகம் கிருஷ்ணசாமி, புதிய நீதிக் கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம், இந்திய ஜனநாயக கட்சி தலைவர் பாரிவேந்தர் ஆகியோருக்கு அந்த தொகுதிகளை வழங்க பா.ஜ.க. நினைக்கிறது.

குறிப்பாக ஓ.பன்னீர்செல்வம், டி. டி. வி. தினகரனை தங்கள் தரப்பு மூலம் இணைத்துக் கொள்ள பா. ஜ. க. மூத்த தலைவர்கள் உறுதியாக உள்ளனர். இதன் மூலம் அ.தி.மு.க. வாக்குகள் தங்களுக்கு முழுமையாக கிடைக்கும் என்று நம்புகிறார்கள். இதை கருத்தில் கொண்டு ஓ.பி.எஸ். அணிக்கு 2 இடங்களை கொடுக்க பேசி வருகிறார்கள். அதில் ஒரு தொகுதியில் ஓ.பன்னீர்செல்வம் மகன் ரவீந்திர நாத்தை நிறுத்தவும் ஏற்பாடுகள் நடக்கின்றன. அத்துடன், இந்த சிறிய கட்சிகளை பா. ஜ. கவின் தாமரை சின்னத்தில் போட்டியிட வைக்கவும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், இந்தத் திட்டம் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும். எனினும், அவர் இது தொடர்பில் எந்தப் பதிலும் அளிக்கவில்லை என்றும் தெரிய வருகின்றது.

# பன்னீர்செல்வம் - தினகரன் இணைந்து செயல்பட முடிவு

சென்னை, மே 10

இலட்சியத்தை அடைய இணைந்து செயல்பட முடிவு செய்துள்ளதாக முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் மற்றும் அ. ம. மு. க. பொதுச் செயலாளர் டி. டி. வி. தினகரன் கூட்டாக அறிவித்துள்ளனர்

அ. ம. மு. க. பொதுச்செயலாளர் டிடிவி தினகரனை நேற்று முன்தினம் அவரின் இல்லத்தில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் திடீரென சந்தித்தார். அவருடன் பண்ருட்டி ராமச்சந்திரனும் டி. டி. வி. தினகரனை சந்தித்தார்.

தன்னைக் காண வந்த இருவரையும், பொன்னாடை போர்த்தி டி. டி. வி. தினகரன் வரவேற்றார். சுமார் அரை மணி நேர சந்திப்புக்குப் பின்னர் அவர்கள் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது பேசிய டி. டி. வி. தினகரன், “ஜெயலலிதாவின் உண்மையான தொண்டர்களிடம் கட்சி இருக்க வேண்டும். இலட்சியத்தை அடைவதற்காக இணைந்து செயல்பட முடிவு செய்துள்ளோம். ஓ. பி. எஸ். மீது எனக்கு எப்போதும் தனிப்பட்ட அன்பு உண்டு. இருவரிடையே மனதளவில் பகை உணர்வு கிடையாது. இந்த இணைப்பில் சுயநலம் இல்லை. எங்களைப் பொறுத்தவரை எடப்பாடி பழனிசாமி



துரோகி தி. மு. க. எதிரி. எம்.ஜி.ஆர், ஜெயலலிதா உருவாக்கிய இயக்கத்தை கபளீகரம் செய்தவர்களிடம் இருந்து மீட்டெடுப்பதற்காக நானும் ஓ. பி. எஸ்ஸூம் இணைந்துள்ளோம்” என்று தெரிவித்தார்.

இதேபோல் முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம், “சசிகலாவை சந்திக்க முயற்சித்தோம். அவர் வெளியூர் சென்றிருப்பதால் திரும்பி வந்தவுடன் நிச்சயம் சந்திப்பதாகக் கூறியிருக்கிறார். அ. தி. மு. கவின் அனைத்து தொண்டர்களும் ஒன்றிணைய வேண்டும் என தமிழக மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதற்கான முயற்சிதான் இந்த சந்திப்பு. அனைவரும் ஒன்றிணைந்து இயக்கத்தை வழிநடத்த வேண்டும் என்பதனை திருச்சி மாநாட்டின் மூலமாக தொண்டர்கள் உணர்த்தினர். அ. தி. மு. கவை மீட்டெடுத்து தி. மு. கவை ஒழிப்போம்” என்றார்.

# பயங்கரவாதத் தொடர்பு தமிழகத்தில் இருவர் கைது!

சென்னை, மே 10

தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, பழனி உளிட்ட 10 பகுதிகளை சேர்ந்த பொப்புலர் பிரண்ட் ஒவ் இந்தியா அமைப்பை சேர்ந்த நிர்வாகிகளின் வீடுகளில் தேசிய புலனாயவு முகமை (என். ஐ. ஏ.) அதிகாரிகள் நேற்று சோதனை மேற்கொண்டனர்.

தடை செய்யப்பட்ட பொப்புலர் பிரண்ட் ஒவ் இந்தியா அமைப்பு, அதன் துணை அமைப்புகள் தொடர்பிலேயே இந்த சோதனை நடவடிக்கை இடம் பெற்றது.

இந்த சோதனை நடவடிக்கையின்போது சென்னை திருவொற்றியூரில் வசித்து வரும் அப்துல் ரசாக் என்பவரின் வீட்டில் என்ஐஏ அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர். சுமார் 5 மணி நேரம் சோதனை நடைபெற்று வந்த நிலையில், முக்கிய ஆவணங்களை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதனை தொடர்ந்து அப்துல் ரசாக்கை கைது செய்தனர்.

இதேபோல், திண்டுக்கல் மாவட்டம், பழனி நேதாஜி நகரை சேர்ந்த 50 வயதுடைய முகமது கைசர் என்பவரின் வீட்டிலும் அதிகாரிகள் சோதனை செய்தனர். முகமது கைசர் பி. எவ். ஐ. அமைப்பின் மதுரை மண்டல தலைவராக செயல்பட்டு வந்தவர். இந்த சோதனையை தொடர்ந்து, முகமது கைசரை என். ஐ. ஏ. அதிகாரிகள் கைதுசெய்து அழைத்துச் சென்றனர்.

இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றமும், பரபரப்பும் நிலவியது.

(ஐ)

# மாகாண சபை தேர்தலை நடத்த தயாராகிறது அரசு?

## இந்த ஆண்டு இறுதிக்குள் 2 தேர்தல்கள்

கொழும்பு, மே. 10

**இந்த வருட இறுதிக்குள் இரண்டு தேர்தல்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.**

முதலில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலையும், அடுத்து மாகாண சபைத் தேர்தலையும் நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார் என்று அறியமுடிகின்றது.

இந்தத் தேர்தலை நடத்துவது தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துக்கும் இந்தியாவுக்கும் ஜனாதிபதி வாக்குறுதி வழங்கியுள்ளார் என்று ஜனாதிபதி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு இந்தியா அவ்வப்போது இலங்கை அரசை வலியுறுத்தி வருகின்றது. இலங்கையின் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இந்தியாவின் உதவி தொடர்ச்சியாகத் தேவை என்பதால் அந்த நாட்டின் கோரிக்கையை நிராகரிக்க முடியாத நிலையில் இலங்கை அரசு உள்ளது.

இதனால் இந்த வருடத்தில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளார் என்றும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நடத்தியது போல் துண்டு துண்டாக அந்தத் தேர்தல் நடத்தப்படும் என்றும் அறியமுடிகின்றது.

அந்தவகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான தேர்தலை முதலில் நடத்தும் திட்டம் ரணிலிடம் உள்ளது என அரச தகவல்கள் கூறுகின்றன.

அதேபோல், உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடத்தப்படும் என்ற வாக்குறுதியை ஜனாதிபதி சர்வதேச நாணய நிதியத்துக்கு வழங்கியுள்ளார் என்றும் அறிய முடிகின்றது. (அ)

# 16 வயது சிறுமியின் மரணம் பிரதான சந்தேக நபர் கைது

கொழும்பு, மே. 10

16 வயது சிறுமியின் மரணத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் ஹிக்கடுவையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெசாக் தினத்துக்கு அடுத்த நாள் களுத்துறை தெற்கு, காலி வீதியிலுள்ள விடுதியொன்றின் பின்புறமுள்ள ரயில் கடவைக்கு அருகிலிருந்து குறித்த சிறுமியின் சடலம் மீட்கப்பட்டிருந்தது.

குறித்த சிறுமி, பெண்ணொருவர் மற்றும் இரு ஆண்கள் கடந்த 06ஆம் திகதி மாலை குறித்த ஹோட்டலில் இரு அறைகளில் தங்கியிருந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து தம்பதியினரும் சிறுமியுடன் வந்த இளைஞரும் சில மணித்தியாலங்களுக்கு பின்னர் ஹோட்டலில் இருந்து வெளியேறியுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து ரயில் கடவைக்கு அருகிலிருந்து சிறுமியின் நிர்வாண சடலம் கண்டு பிடிக்கப்பட்டிருந்தது. (அ)

# மன்னார் மாவட்ட அரச அதிபரின் கணவருக்காக விதிமுறையை வளைத்தது வடக்கு கல்வியமைச்சு

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 10

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் கணவர் என்பதற்காக, வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு விதிமுறைகளை இவ்விடத்துக்கு வளைத்த அதிர்ச்சிச் சம்பவம் நடந்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அவரது அறிக்கையில்,

நியமன விதிமுறைகளை மீறியும் குறித்த அதிபர் ஓய்வு பெறுவதற்கு ஐந்து மாதங்களே உள்ள நிலையில், மன்னார் அரச அதிபரின் கணவர் என்பதற்காக, மன்னார் மாவட்டத்திலுள்ள வங்காலை சென்.ஆன்ஸ் பாடசாலைக்கு முறையற்ற நியமனமாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சால் அதிபர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

புதிதாக அதிபராக நியமிக்கப்படும் பாடசாலையில், குறித்த அதிபர் மூன்று வருடங்கள் கட்டாயம் சேவையாற்றவேண்டும் என்று நிபந்தனைகளைப் போடும் வடக்கு மாகாண கல்வி அமைச்சு, மன்னார் அரச அதிபரின் கணவருக்காக, நெறிமுறைகளை மாற்றியமைப்பது பாரிய அநீதியான செயற்பாடாகும்.

மன்னார் அரச அதிபர், தனது பதவியை வைத்து செய்ய முயலும் சுயநலத்தேவைகளுக்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சும் உடந்தையாக செய்யப்பட்டதை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

குறித்த முறையற்ற அதிபர் நியமனம் நிறுத்தப்பட்டு பொருத்தமான முறையில் நியமனம் வழங்கப்படவேண்டும்.

குறித்த நியமனம் சீர்செய்யப்படவில்லையாயின், பாடசாலைகளில் அதிபராக நியமிக்கப்படும் ஒருவர் மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக அதே பாடசாலையில் கடமையாற்றவேண்டும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சு விதித்துவரும் நிபந்தனையை இலங்கை ஆசிரியர் சங்கத்தால் கேள்விக்கு உட்படுத்தப்படும் என சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# நுவரெலியா வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சை இடைநிறுத்தம்

கொழும்பு, மே. 10

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கண் வெண்புரை நீக்கும் சத்திர சிகிச்சைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஏப்ரல் 5 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சைகளின் பின்னர் 10 நோயாளர்களின் கண்பார்வை குறைவடைந்துள்ளமையினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் மஹேந்ர செனவிரத்ன தெரிவித்தார்.

அன்றைய தினம் 34 நோயாளர்களுக்கு கண் வெண்புரை நீக்கும் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சத்திர சிகிச்சைகளின்போது பயன்படுத்தப்பட்ட மருந்துகளினால் ஏதேனும் ஒவ்வாமை ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக விசேட வைத்திய நிபுணர் மஹேந்ர செனவிரத்ன கூறினார். (அ)

# பௌசியின் உறுப்புரிமையை இடைநிறுத்த கட்சி தீர்மானம்

கொழும்பு, மே. 10

கட்சியின் தீர்மானங்களுக்கு எதிராக செயற்பட்டதன் காரணமாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. எச்.எம்.பௌசியின் கட்சி உறுப்புரிமையை இடைநிறுத்த கட்சி முடிவு செய்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்ததன் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக நேற்று முன் தினம் பிற்பகல் கூடிய ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

இது தொடர்பாக தேவையான பணிகளை செய்ய கட்சியின் ஒழுக்காற்றுக் குழுவை நியமிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் கொழும்புமாநகரவபைக்கு போட்டியிட முஜிபுர் ரஹ்மான் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகியதை அடுத்து, வெற்றிடமான பதவிக்கு பௌசி தெரிவு செய்யப்பட்டார். (அ)

# போலி நாணயத்தாள்கள் அச்சிட்ட விவகாரம் யாழ்ப்பாண பாடசாலை மாணவனும் கைது!

யாழ்ப்பாணம், மே. 10

போலி நாணயத்தாள் அச்சிடப்பட்ட விவகாரத்தில் யாழ்ப்பாணத்தில் 19 வயதான பாடசாலை மாணவன் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

போலி நாணயத்தாள்களுடன் யாழ். பல்கலைக்கழக மாணவன் கைது செய்யப்பட்ட விவகாரத்திலேயே, பாடசாலை மாணவனும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 4ஆம் திகதி, ஆனையிறவு வீதித்தடுப்பில் பொலிஸார் மேற்கொண்ட சோதனையில், போலி நாணயத்தாள்களுடன் சென்ற யாழ்.பல்கலைக்கழக மாணவன் மற்றும் ஓட்டோச் சாரதி ஒருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்ற போது அவர்கள் கைதாகினர். மோட்டார் சைக்கிளின் பின்னாலிருந்தவர் கொண்டு சென்ற பையில் இருந்து போலி நாணயத் தாள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

5,000 ரூபாய் 250 போலி நோட்டுகளும், 500 ரூபாய் 27 போலி நோட்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. வரிசை எண்களும் அவற்றில் பொறிக்கப்பட்டிருந்தன. கைப்பற்றப்பட்ட பணத்தின் பெறுமதி 1.2 மில்லியன் ரூபா.

பல்கலைக்கழக மாணவன் புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகக் கொண்டவர். யாழ். பல்கலைக்கழ கலைப்பீடத்தில் 3ஆம் வருடத்தில் கல்வி பயில்கிறார். ஓட்டோச் சாரதி மிருசுவில் பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவராவார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், போலி நாணயத்தாள் அச்சிடப்பட்ட விவகாரத்தில் பாடசாலை மாணவன் ஒருவருக்கும் தொடர்பிருப்பது தெரிய வந்தது.

கொடிகாமத்தைச் சேர்ந்த 19 வயதான பாடசாலை மாணவன், நேற்று முன்தினம் யாழ்ப்பாண நகரில் வைத்து கைது செய்யப்பட்டார்.

போலி நாணயத்தாள்களை அச்சிட பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் அவரிடமிருந்து மீட்கப்பட்டன. (அ)

# மின்சாரக் கட்டணம் ஜூலையில் குறையும்

கொழும்பு, மே. 10

ஜூலை மாதம் மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்படும் என நம்புவதாக பெருந்தோட்டகைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

சமய நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் கொட்டாபொலவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் பத்திரன, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சும் அரசாங்கமும் இணைந்து ஜூலை மாதம் மின்சாரக் கட்டணத்தை திருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளமையினால் உற்பத்திச் செலவு குறைந்துள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களில் கவனம் செலுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இது மின் உற்பத்திக்கான ஒட்டுமொத்த செலவையும் குறைக்கும்.

எனவே எதிர்வரும் ஜூலை மாதம் மீள்திருத்தத்தின்போது மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்படும். மின்சாரக் கட்டணக் குறைப்பு தொழில்துறைகளுக்கு குறிப்பாக தேயிலை தொழிலுக்கு நன்மை பயக்கும்-என்றார். (அ)

# நிதிக் குழுவின் தவிசாளராக ஹர்சவை நியமிக்கவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

கொழும்பு மே 10

**'வங்குரோத்து அடைந்த நாட்டைச்சேர்ந்த மக்களது வாழ்க்கை கேள்விக்குள்ளாகியுள்ளது. எனவே, வெகு விரைவில் நிதிக்குழுவின் தவிசாளராக ஹர்ஷ டி சில்வாவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு' எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார்.**

பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்க்கட்சியை சீர்குலைப்பதற்கான வேலைத்திட்டங்களே தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எதிர்க்கட்சியை சீர்குலைப்பது, எதிர்க் கட்சியில் உள்ளவர்களை ஆளுங்கட்சியில் இணைத்துக்கொள்ளும் பணிகளே முன்னெடுக்கப்படுகின்றன.

நிதிக் குழுவின் தவிசாளர் பதவியை வழங்குவதிலேயே இழுபறி நிலைமை காணப்படுகின்றது.

இவ்வாறான நிலைமையில், கீழ்த்தரமான அமைச்சுப் பதவிகளை ஒருவரும் ஏற்கபோவதில்லை.

அமைச்சரவைக்கு தொடர்ந்தும் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டு கொண்டே இருக்கின்றனர்.

முதுகெலும்பு இருக்குமாயின் நிதிக் குழுவின் தவிசாளர் பதவிக்கு ஹர்ச டி சில்வாவை நியமிப்பதாக அறிவிப்பு விடுவியுங்கள்.

சபாநாயகரே நான் உங்களை அவமானப்படுத்தவில்லை.

எனினும் நீங்கள் அரசாங்கத்தின் கைக்கூலிகளாக செயற்பட முடியாதல்லவா?

அரசாங்கத்தின் அடிமையாக நீங்கள் செயற்பட முடியாது.

வங்குரோத்து அடைந்த இந்த நாட்டில் அரைவாசிக்கும் மேற்பட்ட மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்கு உள்ளாகியுள்ளது.

வங்குரோத்து அடைந்த இந்த நாட்டின் நிதிக் குழுவின் தவிசாளராக ஹர்ச டி சில்வாவின் பெயரை பரிந்துரையுங்கள்.

நிதிக்குழுவுக்கு தவிசாளரை வெகுவிரைவில் நியமியுங்கள்- என்றார். (அ)

# மின்சக்தி, வலுசக்தி மறுசீரமைப்புக்கு அமெரிக்க உதவித்திட்டம் ஒத்துழைப்பு

கொழும்பு, மே. 10

வலு சக்தி துறை மற்றும் மின்சாரத்துறை மறுசீரமைப்புக்கு சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க உதவித்திட்டம் அதன் ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அமைச்சில் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க உதவித்திட்டத்தின் ஆலோசகர் அரிந்தம் கோஷ் உள்ளிட்ட குழுவினருடன் விசேட கலந்துரையாடலொன்று முன்னெடுக்கப்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அதற்கமைய எதிர்வரும் 8 வாரங்களுக்குள் மறுசீரமைப்புக்களுக்கான வரிபடத்தைத் தயாரித்து , அடுத்த கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க உதவித்திட்டத்தின் இந்த ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஒட்டுமொத்த மக்களையும் ஏமாற்றுகிறது அரசாங்கம்

## ஜீ. எல். பீரிஸ் குற்றச்சாட்டு



கொழும்பு, மே. 10

வங்குரோத்து அடைந்தும் ஊழல் மோசடி முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை. நாட்டுக்கு வருகை தரவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவிடம் அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளை எடுத்துரைப்போம். தேசிய கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் அரசாங்கம் ஒட்டுமொத்த மக்களையும் ஏமாற்றுகிறது என பாராளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் சுதந்திர மக்கள் சபையின் ஆலோசகர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள அரசாங்கம் ஏற்றுக் கொண்ட நிபந்தனைகளைச் செயற்படுத்தும்போது சமூக கட்டமைப்பு மிக மோசமாக பாதிக்கப்படும். நடுத்தர மக்கள் எதிர்கொள்ளும் பாதிப்புக்கு ஒட்டுமொத்த பாராளுமன்றமும் பொறுப்பு கூறவேண்டும் என்ற நிலைமையை அரசாங்கம் தோற்றுவித்துள்ளது.

நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் டொலர் நீடிக்கப்பட்ட நிதி வசதியை பெற்றுக்கொள்ள அரசாங்கம் கடுமையான நிபந்தனைகளை அமுல்படுத்தியுள்ளது. இதனால் எதிர்வரும் நான்கு ஆண்டு காலப்பகுதியில் மாத்திரம் சகல சேவைகளுக்குமான வரி 119 சதவீதத்தால் அதிகரிக்கப்படும். இதை நடுத்தர மக்களால் பொறுத்துக் கொள்ளமுடியாது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான சிறந்த திட்டங்களை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் முன்வைக்கவில்லை. நாணய நிதியம் முன்வைத்த நிபந்தனைகளை கண்மூடி ஏற்றுக்கொண்டது. இதனால் நடுத்தர மக்களே பாதிக்கப்படுவார்கள். இந்த அரசாங்கம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் உணர்வுபூர்வமாக அவதானம் செலுத்தாது.

2024 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பிரகாரம் நிச்சயம் ஆட்சி மாற்றம் ஏற்படும். ஆகவே புதிய அரசாங்கத்தின் கீழ் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்பதில் உறுதியாக இருப்போம்.

தேசிய கடன் ஒருபோதும் மறுசீரமைக்கப்படாது என மத்திய வங்கியின் ஆளுநர், நிதியமைச்சின் இராஜாங்க அமைச்சர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் தற்போது வெளிநாட்டு கடன்களை மறுசீரமைக்க வேண்டும் என குறிப்பிடப்படுகிறது. தேசிய கடன் மறுசீரமைக்கப்பட்டால் வங்கி கட்டமைப்பு நிச்சயம் பாதிக்கப்படும்.

தேசிய கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் அரசாங்கம் ஒட்டுமொத்த மக்களையும் ஏமாற்றுகிறது. அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகள் தொடர்பில் எதிர்வரும் மாதம் நாட்டுக்கு வருகை தரவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளிடம் எடுத்துரைப்போம்-என்றார். (அ)

### தமிழ்க் கைதிக்கு கொலை மிரட்டல்:

# லொஹான் ரத்வத்தையை மன்றில் ஆஜராக உத்தரவு

கொழும்பு, மார்ச் 10

அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் பிரவேசித்து தமிழ்க் கைதி ஒருவருக்கு கொலைமிரட்டல் விடுத்த சம்பவம் தொடர்பில் நீதிமன்றில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தையை நீதிமன்றில் ஆஜராக உத்தரவிடப்பட்டுள்ளது.

அநுராதபுரம் பிரதான நீதிவான் மற்றும் மேலதிக மாவட்ட நீதிபதி நாலக சஞ்சீவ ஜயசூரிய எதிர்வரும் செப்ரெம்பர் 14ஆம் திகதி அநுராதபுரம் பிரதான நீதிவான் நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளார்.

அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை, அங்கிருந்த தமிழ்க் கைதி ஒருவக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக குற்றம் சுமத்தப்பட்டு கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டபோதே, பிரதான நீதிவான் இவ்வாறு உத்தரவிட்டார். (அ)

# காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்துக்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குங்கள்

## கனடிய அதிகாரியிடம் கலாநிதி ஜெஹான் பெரேரா



கொழும்பு, மே. 10

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் போன்ற கட்டமைப்புக்கள் எதிர்வருங் காலங்களில் சிறப்பாக செயற்படக்கூடிய வாய்ப்பு காணப்படுவதனால், அவற்றுக்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குமாறு கனேடிய பூகோள விவகாரங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட அதிகாரியிடம் சிவில் சமூக செயற்பாட்டாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனேடிய பூகோள விவகாரங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட அதிகாரி நவீதா ஹூஸைனுக்கும் சிவில் சமூக செயற்பாட்டாளர் கலாநிதி ஜெஹான் பெரேராவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன் தினம் கொழும்பில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது தற்சமயம் கனேடிய அரசாங்கத்திடமிருந்து இலங்கைக்கு எத்தகைய உதவிகள் தேவைப்படுகின்றன என்று அந்நாட்டின் சிரேஷ்ட அதிகாரி நவீதா ஹூஸைன் ஜெஹான் பெரேராவிடம் கேட்டறிந்துகொண்டார்.

அதற்குப் பதிலளித்த கலாநிதி ஜெஹான் பெரேரா தற்போது இலங்கையில் இயங்கிவரும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் என்பன பற்றி எடுத்துரைத்ததுடன், அந்த அலுவலகங்கள் தற்போது உரியவாறு முழுமையாக இயங்காத போதிலும், அவை உண்மையைக் கண்டறிவதை முன்னிறுத்தி உருவாக்கப்பட்ட சிறந்த கட்டமைப்புக்கள் என்று சுட்டிக்காட்டினார்.

எனவே எதிர்வருங்காலத்தில் அக்கட்டமைப்புக்கள் சிறப்பானமுறையில் இயங்கக்கூடிய வாய்ப்பு காணப்படுவதனால், அவற்றுக்கு ஆதரவளிக்குமாறும் அவசியமான உதவிகளை வழங்குமாறும் ஜெஹான் பெரேரா நவீதா ஹூஸைனிடம் கேட்டுக் கொண்டார்.

அதேபோன்று இலங்கையைப் பொறுத்தமட்டில் மொழிசார் கற்கைநெறிகளுக்கும், பயிற்சி வழங்கலுக்கும் கனேடிய அரசாங்கம் முன்னுரிமையளித்துவரும் நிலையில், அதற்கு அப்பால் அதிகாரப்பகிர்வு குறித்தும் அவதானம் செலுத்துமாறு கனேடியப் பிரதிநிதியிடம் கலாநிதி ஜெஹான் பெரேரா வேண்டுகோள் விடுத்தார். (அ)

# புதிய பயங்கரவாதச் சட்டத்தால் ஜீ.எஸ்.பி. கிடைக்காமல்போகும்!

## ஹர்ச டி சில்வா தெரிவிப்பு



**கொழும்பு, மே 10**

**உத்தேச புதிய பயங்கரவாத சட்டமூலத்தை நீக்கிக்கொள்ளாவிட்டால் ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை என்பது எந்தவகையிலும் நாட்டுக்கு கிடைக்கப்போவதில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நிதி இராஜாங்க அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழிவுகளுக்கு நாம் எதிர்ப்பை தெரிவிக்கவில்லை.

ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் தொடர்ச்சியாகக் கூறினார்.

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை தொடர்பில் நேற்று காலை கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை என்பது இவ்வாண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது.

இது தொடர்பில் பலர் அறியாமலேயே உள்ளனர்.

இந்த வரிச்சலுகை தொடர்பில் ஐரோப்பிய சமவயாமானது புதிய நிபந்தனை ஒன்றை கொண்டுவந்துள்ளது.

அதாவது, ஜி.எஸ்.பிளஸ் வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளும் நாடுகள் புதிதாக மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

அதன் பின்பு 2024 ஆம் ஆண்டிலிருந்து 2033 ஆம் ஆண்டு வரை எவ்வாறு இந்த வரிச்சலுகையை எந்தெந்த நாடுகளுக்கு வழங்கப்போகின்றார்கள் என்பதை ஐரோப்பிய சங்கம் தீர்மானிக்கும்.

இன்று ஐரோப்பிய சங்கமானது என்ன கூறுகின்றது.

ஜூ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் பல நிபந்தனைகளை நாடுகள் செயற்படுத்த வேண்டும்.

அந்த நிபந்தனைகள் எனும் மனித உரிமைகள், தொழிலாளர் உரிமை, நல்லாட்சி மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பில் ஐரோப்பிய சங்கமானது வலியுறுத்துகின்றது.

இதில் பிரதானமாகக் காணப்படுவது வாக்கு உரிமையாகும்.

குடிமக்களுக்கு வாக்கு உரிமை என்பது இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

வாக்கு உரிமை என்பது ஜனநாயகத்தின் பிரதான பண்பாகக் காணப்படுகின்றது.

தேர்தலை நடத்தாமல் இருப்பது என்பது ஜனநாயகத்தை மீறுவதாகும்.

நாட்டில் தேர்தலை பிற்போடுவதன் காரணமாக பாரிய சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

எனவே ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக தேர்தல் உரிமையை மக்களுக்கு பெற்றுக்கொடுக்குமாறே நாம் அரசாங்கத்தை கோருகின்றோம்.

இரண்டாவது உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலமாகும்.

உத்தேச புதிய பயங்கரவாத சட்டமூலத்தை நீக்கிக்கொள்ளாவிட்டால் ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை என்பது எந்தவகையிலும் நாட்டுக்கு கிடைக்கப்போவதில்லை.

அரசியலமைப்பினூடாக உறுதிபடுத்தப்பட்டுள்ள மக்களின் உரிமைகள், ஜனநாயக உரிமைகள் என்பன கேள்விக்குள்ளாகும்.

மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு இன்றுடன் ஒரு வருடமாகின்றது. இன்று மே 09ஆம் திகதி.

மே 09 வன்முறை தொடர்பில் நான் இந்த இடத்தில் மீண்டும் கதைக்கபோவதில்லை.

எனினும் அரசாங்கத்தின் மீதான அதிருப்தியை வீதியில் இறங்கிக் கூறுவதற்கு நாட்டு உரிமை உள்ளது.

அவ்வாறான செயற்பாடுகளை பயங்கரவாத செயற்பாடுகளாக சித்தரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களை பயங்கரவாதிகளாக காண்பித்து அவர்களை தடுத்து வைத்து விசாரிப்பதற்கான கட்டளையை இந்த சட்டமூலத்தின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த விடயத்துக்கு ஐரோப்பா சங்கம் எந்தவிதத்திலும் உடன்படப்போவதில்லை.

எனவே அரசாங்கமானது உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை நீக்கிக் கொள்ள வேண்டும்-என்றார்.

(அ)

# தன்பாலின சேர்க்கையை குற்றமற்றதாக்கும் சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது அல்ல

## உயர்நீதிமன்ற வியாக்கியானத்தை அறிவித்தார் சபாநாயகர்

கொழும்பு, மே. 10

தன்பாலின சேர்க்கையை குற்றமற்றதாக்கும் வகையில் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தச் சட்டமூலம் அரசியலமைப்பிற்கு முரணானது அல்ல என உயர்நீதிமன்றம் வியாக்கியானத்தில் தெரிவித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி. தொலவத்தவினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட குற்றவியல் (திருத்த) சட்டமூலம் இலங்கையின் அரசியலமைப்பிற்கு முரணானது என தீர்ப்பளிக்க கோரி ஓய்வுபெற்ற இராணுவ பிரிகேடியர் கே.அதுல எச்.டி சில்வா, ஷெனாலி டி.வடுகே மற்றும் ஜெஹான் ஹமீட் ஆகியோரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய மற்றும் நீதியரசர்களான விஜித் மலல்கொட மற்றும் அர்ஜூன் ஒபேசேகர ஆகியோர் அடங்கிய மூன்று நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்படி, இந்த சட்டமூலத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி நிறைவு செய்த உயர் நீதிமன்றம், பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட குற்றவியல் (திருத்த) சட்டமூலத்தின் சரத்துக்கள் இலங்கையின் அரசியலமைப்பிற்கு ஏற்புடையதா அல்லது முரணானதாக என்ற தமது முடிவை பாராளுமன்ற சபாநாயகரிடம் இரகசியமாக வழங்குவதாக அறிவித்தது.

இந்த திருத்தம் தண்டனைச் சட்டம் தொடர்பான பாராளுமன்றின் எதிர்பார்ப்புகளுக்கு முரணானது என்றும், அதன் மூலம் அரசியலமைப்பின் விதிகளை கடுமையாக மீறப்படுவதாகவும் பௌத்த, இந்து, கிறிஸ்தவ அல்லது இஸ்லாமிய நம்பிக்கைகளுக்கு ஏற்புடையதல்ல என்றும் மனுதாரர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

தனிநபர் பிரேரணையாக பாராளுமன்ற உறுப்பினர் தொலவத்தவினால் முன்வைக்கப்பட்ட குறித்த சட்டமூலம், தன்பாலின சேர்க்கையை குற்றமற்றது என விளக்க முயற்சிக்கும் அதேவேளையில் அத்தகைய செயற்பாடுகளை ஊக்குவிப்பதாகவும் மனுதாரர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

(அ)

# 5 நாள் சிசுவை கைவிட்ட தாய்க்கு விளக்கமறியல்!

கொழும்பு, மே. 10

கண்டி - எல்கடுவ வத்தேகம பிரதேசத்தில் மே 4 ஆம் திகதி புத்தர் சிலையொன்றுக்கு அருகில், பிறந்து 5 நாட்களேயான சிசுவொன்றை கைவிடப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதான பெண் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இரண்டு பெண்களால் குறித்த இடத்திலிருந்து குழந்தையை கண்டெடுக்கப்பட்டது. குழந்தை தற்போது கண்டி தேசிய வைத்தியசாலையில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட குழந்தையின் தாய் தெல்தெனிய நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும், குழந்தையின் தேவை கருதி அவரும் கண்டி தேசிய வைத்தியசாலையில் சிறைச்சாலை அதிகாரிகளின் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

பிறந்து 5 நாட்களேயான சிசுவை கைவிட்டு சென்ற குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பெயரின் அதனது தாய் வத்தேகம காவல்துறையால் கடந்த 5 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

குறித்த பெண், மாத்தளை - கரகஹஹின்ன பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவரென தெரியவந்துள்ளது.

குறித்த பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, அவர் தனது வீட்டில் குழந்தையைப் பெற்றெடுத்து விட்டு, மாத்தளை பகுதிக்கு சென்ற பாரவூர்தியில் அவ்விடத்துக்கு வந்து குழந்தையை கைவிட்டுச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

(அ)

# மாணவியிடம் நிர்வாணப்படங்கள் கோரிய மதபோதகருக்குப் பிணை

கொழும்பு, மே. 10

பாடசாலை மாணவி ஒருவரின் நிர்வாண புகைப்படங்களை பெற முயற்சித்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மதப் போதகரை தலா 5 இலட்சம் ரூபா பெறுமதி 2 சரீரப் பிணைகளில் செல்ல நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் நீர்கொழும்பு மேலதிக நீதவான் தர்ஷிமா பிரேமரத்ன முன்னிலையில் அழைக்கப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

15 வயது பாடசாலை மாணவி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டில், வட்ஸ்அப் மூலம் தன்னைத் தொடர்பு கொண்டு குறித்த போதகர் நிர்வாணப் புகைப்படங்களைக் கோரியதாக கூறியுள்ளார்.

(அ)

# நபர்களில் ரணில் முதலிடம்!

## கட்சிகளில் தேசிய மக்கள் சக்தி முன்னிலை!!

கொழும்பு, மே. 09

மக்கள் மத்தியில் ஆதரவு பெருகிவரும் அரசியல் வாதிகளின் பட்டியலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலிடத்தை பிடித்துள்ளார் எனவும், கட்சிகளின் பட்டியலில் தேசிய மக்கள் சக்தி முதலிடத்தில் உள்ளது எனவும் தெரியவந்துள்ளது.

சமகால அரசியல் நிலைவரம் மற்றும் மக்களின் நிலைப்பாடு என்னவாக உள்ளது என்பது தொடர்பில் அரச நிறுவனமொன்று அண்மையில் நடத்திய கருத்து கணிப்பிலேயே இவ்விடயம் தெரியவந்துள்ளது.

இதற்கமைய அரசியல்வாதிகளுள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 33 வீதமானோரும், அநுர குமார திஸாநாயக்கவுக்கு 16 வீதமானோரும், சஜித் பிரேமதாஸவுக்கு 12 வீதமானோரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

கட்சிகளுக்கான செல்வாக்கு பட்டியலில் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி முன்னிலையில் உள்ளது. மக்கள் மத்தியில 21 சதவீத ஆதரவு கிடைத்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்திக்கு 17 வீதமும், மொட்டு கட்சிக்கு 15 வீதமும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 11 வீதமும் மக்கள் மத்தியில் ஆதரவு உள்ளதென கருத்து கணிப்பில் தெரியவந்துள்ளது.

'ஹெலிகொப்டர்' கூட்டணிக்கு 5 சதவீத ஆதரவும், சுதந்திரக்கட்சிக்கு 4 சதவீத ஆதரவு கிட்டியுள்ளது. சுமார் 24 வீதமானோர் கட்சி சார்பற்ற கொள்கையில் இருப்பதாக தெரியவந்துள்ளது.

(அ)

ஈழநாடு



# சீனாவுடன் எல்லை மோதலில் இந்தியாவுக்கு உளவுத் தகவலை அமெரிக்கா வழங்கியுள்ளது!

றொகன்தா டி சில்வா

சீனாவுடன் போருக்கு தயார் செய்வதில் அமெரிக்க-இந்திய ஒத்துழைப்பு ஒரு புதிய கட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், பென்டகன் இந்தியாவிற்கு நிகழ்நேர இராணுவ உளவுத்தகவலை வழங்கியுள்ளது. இது டிசம்பர் 2022 எல்லை மோதலில் சீனாவின் மக்கள் விடுதலை இராணுவப் படைகளை முறியடிக்க உதவியது என்று **US News & World** அறிக்கை கூறுகிறது.

கடந்த டிசம்பர். 9 அன்று, நூற்றுக்கணக்கான இந்திய மற்றும் சீன துருப்புக்கள் உண்மையான கட்டுப்பாட்டு எல்லையில் மோதிக்கொண்டன. உலகின் இரண்டு அதிக மக்கள்தொகை கொண்ட நாடுகளை பிரிக்கும் 3,400 கிமீ கொண்ட இந்த எல்லை பெருமளவில் வரையறுக்கப்படாமல் இருக்கிறது. அங்கே உயிரிழப்புகள் ஏதும் ஏற்படாத நிலையில், இந்த மோதல் பல மணி நேரம் நீடித்ததாகவும், இரு தரப்பினரும் கைகலப்பில் ஈடுபட்டதாகவும் தடியடி மற்றும் பிரம்புகளால் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

அதன் பிறகு விரைவில், வடகிழக்கு இந்திய மாநிலமான அருணாச்சலப் பிரதேசத்தின் ட்வாங் பகுதியில் சீன ஊடுருவலை முறியடித்ததாக புது தில்லி பெருமையடித்துக் கொண்டது. இதற்கிடையில், இந்திய துருப்புக்கள் கட்டுப்பாட்டு எல்லையின் பக்கம் உள்ள பகுதியை மறுபரிசீலனை செய்வதிலிருந்து மக்கள் ராணுவத்தை தடுப்பதாக பெய்ஜிங் குற்றம் சாட்டியது.

மார்ச் 20 அமெரிக்க செய்தி அறிக்கையின்படி, 'நிகழ்நேரத்தில்' வழங்கப்பட்ட 'செயல்படக்கூடிய' அமெரிக்க செயற்கைக்கோள் உளவுத்துறை மூலம் வரவிருக்கும் சீன ராணுவ ஊடுருவல் குறித்து முன்கூட்டியே இந்தியப் படைகள் எச்சரிக்கப்பட்டிருந்தன. இந்த உளவுத்தகவல்கள் சீன நிலைகள், நகர்வுகள் மற்றும் படைபலம் பற்றி மிகவும் விரிவானதாகக் கூறுகிறது, மேலும் அமெரிக்கா முன்னர் இந்திய இராணுவத்துடன் பகிர்ந்து கொண்டதை விட வேகமாக தகவல்களை வழங்கியது என்று கூறப்படுகிறது.

இந்திய துருப்புக்கள் இத்தகவல்களுக்கு 'காத்திருந்தன' என்று அமெரிக்க அரசாங்க வட்டாரம் யுஎஸ் நியூசிடம் தெரிவித்தது. 'அமெரிக்கா, இந்தியாவிற்கு எல்லாவற்றையும் முழுமையாகத் தயாராகக் கொடுத்ததுதான் அதற்குக் காரணம் ஆகும். இரண்டு ராணுவங்களும் இப்போது எப்படி ஒத்துழைத்து உளவுத் தகவல்களைப் பகிர்ந்து கொள்கின்றன என்பதற்கான ஒரு சோதனை நிகழ்வை இது காட்டுகிறது' என்று அது குறிப்பிட்டது.

டிசம்பர் 9 இமாலய எல்லை மோதல் குறித்த இரகசிய அமெரிக்க உளவுத்தகவல் மதிப்பாய்வு பற்றி நன்கு அறிந்த பல அரசாங்க ஆதாரங்கள் இந்தக் கணிப்பை உறுதிப்படுத்தியதாகவும், இந்திய-அமெரிக்க இராணுவ ஒத்துழைப்பில் இது ஒரு புதிய கட்டத்தைக் குறிப்பதாகவும் யுஎஸ் நியூஸ் கூறியது. "இது நிச்சயமாக சீனர்களை அதிர்ச்சியடையச் செய்யும், ஏனெனில் அவர்கள் இதற்கு முன்பு இதை அனுபவித்திருக்க மாட்டார்கள்," என்று ஒரு உயர்மட்ட ஆதாரம் அமெரிக்க செய்தியிடம் தெரிவித்தது. "இந்த தடவை அவர்களுக்கு முன்பு கிடைத்ததை போன்று சாதகமாக இருக்கவில்லை."

2020 இலையுதிர்காலத்தில் புது தில்லியும் வாஷிங்டனும் கையெழுத்திட்ட அடிப்படை பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்காவிற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்கும் இடையே 'நிகழ்நேர" உளவுத்தகவல் பகிர்வுக்கான கட்டமைப்பு



இந்தியா-சீனா எல்லையில் லடாக்கில் உள்ள பாங்காங் த்சோ ஏரிக்கரை பகுதியில் உள்ள டாங்கிகள்

நிறுவப்பட்டது. எனவே, இந்த ஒப்பந்தம் இந்தியாவின் சொந்த உளவுத்தகவல் மற்றும் இராணுவ நடவடிக்கைகளின் பாதுகாப்பை சமரசம் செய்யக்கூடும் என்று அஞ்சிய இந்தியாவின் இராணுவ ஸ்தாபன பிரிவுகளின் ஆட்சேபனைகளுக்கு மேலாக இதை செய்யும்படி வாஷிங்டன் நீண்ட காலமாக வலியுறுத்தி வந்தது.

அடிப்படை பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தமானது நிகழ்நேர புவிசார் நுண்ணறிவை மாற்றுவதற்கும், உயர்நிலை கண்காணிப்பு மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் ஆயுதங்களை வழங்குவதற்கும் உதவுகிறது. இதை இந்தியா ஏற்றுக்கொண்டது என்பது, வெளிநாட்டு ராணுவங்களுடனான கூட்டு நடவடிக்கைகளுக்கான இயங்குநிலையை வளர்ப்பதில் பென்டகன் "அடிப்படையானது" என்று கருதும் மூன்று ஒப்பந்தங்களிலும் புது தில்லி கையெழுத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தங்கள் தேவையான பொருட்களை வழங்குவதற்கு மற்றும் பழுதுபார்ப்பதற்கு இந்திய துறைமுகங்கள் மற்றும் ராணுவ தளங்களை பயன்படுத்துவது மற்றும் தகவல் தொடர்பு மற்றும் பிற இணக்கத்தன்மை மற்றும் உளவுத்தகவல் பகிர்வு ஆகியவற்றை அணுகவும் பயன்படுத்தவும் வாய்ப்பளிக்கிறது.

மார்ச் 20 அமெரிக்க செய்திகள் மற்றும் உலக அறிக்கைக் கட்டுரையை வெள்ளை மாளிகை உறுதிப்படுத்த மறுத்துவிட்டது, இது டிசம்பர் 9 நிகழ்வுகள் அடிப்படை பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட புவிசார் நுண்ணறிவின் நிகழ்நேரப் பகிர்வு இப்போது செயல்பாட்டில் உள்ளது என்பதற்கான முதல் உறுதிப்படுத்தல் என்று வலியுறுத்தியது. இருப்பினும், மூலோபாய தகவல் தொடர்புக்கான தேசிய பாதுகாப்பு கவுன்சில் ஒருங்கிணைப்பாளர் ஜான் கிர்பி அதை மறுக்கவில்லை. 'அதை என்னால் உறுதிப்படுத்த முடியாது" என்று அவர் வெறுமனே கூறினார்.

இந்தக் 'கசிவு" என்பது இந்திய-அமெரிக்க இராணுவ-மூலோபாயக் கூட்டணி புது தில்லிக்கு, எல்லைத் தகராறு மற்றும் சீனாவுடன் இந்தியாவின் மூலோபாய மோதலில் பரந்தளவில் உறுதியான பலன்களை வழங்குகிறது என்பதை நிரூபிப்பதை தெளிவாக நோக்கமாகக் கொண்டது மற்றும் இந்தியாவின் பெருநிறுவன ஊடகங்களால் விரைவாக அவ்வாறாக ஊக்குவிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டது.

சீனாவிற்கு எதிராக எப்போதும் அதிகரித்து வரும் பொருளாதார, இராஜதந்திர மற்றும் இராணுவ-மூலோபாய தாக்குதலின் ஒரு பகுதியாக, வாஷிங்டன் -முதலில் குடியரசுக் கட்சியின் சர்வாதிகாரியாக இருந்த ட்ரம்ப்பின் கீழ், இப்போது ஜனநாயகக் கட்சி ஜோ பைடனின் கீழ் - இந்திய சீனா எல்லை தகராறில் மிகவும் வெளிப்படையான மற்றும் ஆத்திரமூட்டும் பாத்திரத்தை வகிக்கிறது.

மே 2020 இல் சர்ச்சை வெடித்தபோது, அமெரிக்கா புது டெல்லியை ஒரு கடினமான நிலைப்பாட்டை எடுக்கும்படியும் அதை ஒரு பெரிய சர்வதேச பிரச்சினையாக மாற்றும்படியும் ஊக்குவித்தது. ஒரு மாதத்திற்குப் பிறகு, இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள லடாக் மற்றும் சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள அக்சாய் சின் ஆகியவற்றைக் கடக்கும் கல்வான் பள்ளத்தாக்கில் நடந்த மோதலில் குறைந்தது 20 இந்திய துருப்புக்கள் மற்றும் நான்கு சீன படையினர் கொல்லப்பட்டனர். மேலும் 1962 இல் அவர்கள் ஒரு குறுகிய எல்லைப் போரை நடத்தியதற்கு பிறகு எந்த சமயத்திலும் இல்லாத வகையில் இரண்டு அணு ஆயுத நாடுகளையும் முழு அளவிலான போருக்கு நெருக்கமாக கொண்டு வந்தது.

ஏறக்குறைய மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, ஒவ்வொரு தரப்பிலும் 50,000 துருப்புக்கள் அத்துடன் பீரங்கி, டாங்கிகள் மற்றும் போர் விமானங்கள் ஆகியவையும் எல்லையில் முன்னணியில் நிறுத்தப்பட்டுள்ளன. இரு தரப்பும் துருப்புக்கள் மற்றும் பொருட்களை விரைவாக நகர்த்துவதற்கு அபாரமான இராணுவ உள்கட்டமைப்பைக் கட்டியெழுப்பும் செயல்பாடுகளிலும், புதிய அரண்களை அமைப்பதிலும், விமான ஓடுபாதைகள் மற்றும் சாலை மற்றும் இரயில் இணைப்புகள் அமைப்பதிலும் கூட இறங்கியுள்ளன.

வாஷிங்டன், 2017ல் இந்தியா மற்றும் சீனத் துருப்புக்கள் 10 வாரங்களாக சீனா மற்றும் பூட்டான் இரண்டுமே உரிமை கோரும் இமாலய மலைமுகடான டோக்லாம் பீடபூமியில் மோதிக்கொண்ட போது எடுத்த அணுகுமுறைக்கு முற்றிலும் மாறாக இப்போது நடுநிலைமை என்ற பாசாங்கு எதையும் கைவிட்டுள்ளது. அது பெய்ஜிங்கை "ஆக்கிரமிப்பாளர்" என்று முத்திரை குத்தியது மற்றும் சர்வதேச மன்றங்கள் மற்றும் அறிக்கைகளில் தென் சீனக் கடல் சர்ச்சையை இந்திய-சீனா எல்லைப் பிரச்சனையுடன் இணைக்க பலமுறை முயன்றது, அங்கு வாஷிங்டன் பல்வேறு நாடுகளை பெய்ஜிங்கிற்கு எதிராக தங்கள் பிராந்திய உரிமைகோரல்களை எழுப்பும்படி ஆக்கிரோஷமாக தூண்டியது. அவற்றை சீன "ஆக்கிரமிப்புக்கான" உதாரணங்களாக காட்டியது.

1914 ஆம் ஆண்டு சீனாவுடன் எந்த ஆலோசனையும் இல்லாமல் திபெத்தின் மீது பிரிட்டிஷ் பேரரசு திணித்த மக்மஹோன் கோடு எனப்படும் எல்லைக்கோடு இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான சரியான எல்லையாக அமைகிறது என்ற இந்தியாவின் கூற்றுக்கு அமெரிக்காவின் ஆதரவை உறுதிப்படுத்தும் இரு தரப்பு தீர்மானத்தை நிறைவேற்ற அமெரிக்க செனட் வெளியுறவுக் குழு தற்போது பரிசீலித்து வருகிறது. கூடுதலாக, இது இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே நெருக்கமான ஒத்துழைப்பைக் கோருகிறது, இதில் "மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு தொடர்பு மற்றும் தகவல்-பகிர்வு", மற்றும் முக்கியமான மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தில் அமெரிக்கா-இந்தியா முன்முயற்சி மற்றும் குவாட் -வாஷிங்டனுக்கும் அதற்கு நெருக்கமான ஆசிய பசிபிக் நட்பு நாடுகளான ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா மற்றும் புது டெல்லி இடையிலான அரை-மூலோபாய கூட்டணி என்பன அடங்கும்.

சர்ச்சைக்குரிய இந்திய-சீனா எல்லையில் இருந்து வெறும் 100 கிமீ தொலைவில் உள்ள இமயமலையில் "மிக உயர்வான பகுதியில் போர் நடவடிக்கை" அது யூத் அப்யாஸ் என்றழைக்கப்பட்ட ஆத்திரமூட்டும் இரண்டு வார இராணுவப் பயிற்சியை இந்திய மற்றும் அமெரிக்கத் துருப்புக்கள் முடித்த சில நாட்களுக்குப் பிறகு டிசம்பர் 9 இல் மோதல் ஏற்பட்டது.

டிசம்பர் 2022 இந்தியா-சீனா எல்லை மோதலின்போது அமெரிக்காவினால் வழங்கப்பட்ட நிகழ்நேர புவிசார் இராணுவ உளவுத்தகவல் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியது என்ற அமெரிக்க செய்தி மற்றும் உலக அறிக்கையின் கூற்று உண்மையாக இருக்கலாம். எவ்வாறாயினும், ஆகஸ்ட் 2020 கல்வான் பள்ளத்தாக்கு நடவடிக்கையின் வெற்றியில், ஆயிரக்கணக்கான இந்திய துருப்புக்கள் தொடர்ச்சியான மலையுச்சிகளை தடையின்றி கைப்பற்றியதில் அமெரிக்கா வழங்கிய உளவுத்தகவலின் பங்கு உள்ளது என்று அந்த நேரத்தில் இந்திய அறிக்கைகள் கூறின. இந்திய அதிகாரிகள் பின்னர் இந்த நடவடிக்கை மிகவும் ஆபத்தாக இருந்தது என்றும், முழு அளவிலான எல்லைப் போராக வெடிக்கவில்லை என்றாலும் அது இந்திய மற்றும் சீனப் படைகளுக்கு இடையே ஆயுத மோதல்களுக்கு எளிதாக வழிவகுத்திருக்கலாம் என்றும் ஒப்புக்கொண்டனர். அதாவது, போர் தூண்டிவிடப்படலாம் என்ற அறிவுடன் இது மேற்கொள்ளப்பட்டது இது போரிடுபவர்களின் ஆரம்ப நோக்கங்கள் எதுவாக இருந்தாலும், பாகிஸ்தான் மற்றும் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் போன்ற பிற பிராந்திய சக்திகளை உள்ளடக்கிய ஒரு பரந்த மோதலில் சுழலும் அபாயத்தை கொண்டிருந்தது.

புது தில்லிக்கும் பெய்ஜிங்கிற்கும் இடையே பதட்டங்களைத் தூண்டுவதன் மூலம், சீனாவிற்கு எதிரான போருக்கு ஸ்திரமின்மை, சுற்றி வளைப்பு மற்றும் தயார் செய்வதற்கான உந்துதலுக்கு இந்தியாவை இன்னும் இறுக்கமாகப் பயன்படுத்த வாஷிங்டன் முயன்று வருகிறது. அது இந்தியாவை அதன் தெற்கு மற்றும் மேற்கு எல்லைகளில் அச்சுறுத்தும் ஒரு வழிமுறையாகக் கருதுகிறது, ஆனால் நெருக்கடி ஏற்பட்டால் இந்தியப் பெருங்கடலுக்கான அணுகலை மறுப்பதன் மூலம் சீனாவை பொருளாதார ரீதியாக கழுத்தை நெரிக்கும் அதன் திட்டங்களின் மையமாகவும் அது கருதுகிறது.

வாஷிங்டனின் போர் தயாரிப்புகள் ஏற்கனவே மிகவும் முன்னேறிய நிலையில் உள்ளன, தாய்வானில் இப்போது அமெரிக்கா விரைவாக ஆயுதங்களை குவித்து வருகிறது மற்றும் அதனை ஒரு "மாபெரும் ஆயுதக் கிடங்காக" மாற்ற முற்படுகிறது. இது ஒரு நீண்ட தொடரான வெடிப்பதற்கு சாத்தியமாக தயார் நிலையிலுள்ள புள்ளிகளில் மிகவும் பிரபலமானதாக உள்ளது. அமெரிக்க இராணுவ மற்றும் அரசியல் தலைவர்கள் இராணுவ மோதலின் தவிர்க்க முடியாத தன்மை பற்றி வெளிப்படையாக பேசுகிறார்கள், சிலர் 2025 க்குள் அது வெடிக்கலாம் என்று கூறுகிறார்கள்.

இந்திய முதலாளித்துவம், அதன் பங்கிற்கு, அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து அதன் சீன-விரோத மூலோபாய கூட்டுறவை இரட்டிப்பாக்குகிறது. அதே அமயம் உக்ரேன் மீது வாஷிங்டனின் தூண்டுதல் மற்றும் ரஷ்யாவுடனான போரின் விரிவாக்கம் ஆகியவை எடுத்துக்காட்டுவது என்னவென்றால் அதன் கொள்ளையடிக்கும் பூகோளரீதியான அபிலாஷைகளை முன்னெடுப்பதற்கு அது ஆபத்தான அணுசக்தி மோதலை நடத்துவதற்கு தயாராக உள்ளது என்பதாகும்.

# எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்கான மக்களின் ஜனநாயக உரிமையை பேணிப்பாதுகாத்தல்



கலாநிதி ஜெகான் பெரேரா

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூல வரைவை அரசாங்கம் தற்காலிகமாக மாத்திரமே வாபஸ்பெற்றிருக்கிறது. அந்த வரைவுக்கு திருத்தங்களை செய்வதற்கு யோசனைகளை முன்வைப்பதற்கு மேலும் கால அவகாசத்தை வழங்குவதற்கு தீர்மானித்திருப்பதாக நீதியமைச்சர் கூறியிருக்கிறார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், சிவில் சமூக அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் உயர் மதத்தலைவர்கள் உட்பட சமூகத்தின் பரந்துபட்ட பிரிவினரிடமிருந்து வரைவுக்கு எதிர்ப்பு கிளம்பியது. பெருவாரியான அறிக்கைகள் வெளியிடப்பட்டன. ஜனநாயக ரீதியானவை என்றும் நியாயபூர்வமானவை என்றும் உலகம் பூராவும் அங்கீகரிக்கப்படுகின்ற மக்கள் போராட்டங்களை அரசாங்கம் ஒடுக்குவதற்கு வகைசெய்யக்கூடியதாக விசாலமான அம்சங்களை வரைவு கொண்டிருப்பதே இந்த கடும் எதிர்ப்புக்கான காரணமாகும்.

பொருளாதாரத்தை மீட்டெடுக்க முன்னெடுக்கப்படவேண்டியிருக்கும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புக்கள் நடுத்தர வர்க்கம் மற்றும் தொழிலாளர் வர்க்கத்தவருக்கு இடர்பாடுகளை கொடுக்கும்போது அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் அதிகரிக்கவே செய்யும். மக்கள் போராட்டங்களினால் தோன்றக்கூடிய நெருக்கடி நிலைவரத்தை கையாள அரசாங்கம் அதன் படைக்கல களஞ்சியத்தை தயார் செய்கிறது போன்று தெரிகிறது. அதில் பிரதானமான ஆயுதங்களில் ஒன்று பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலமாகும்.

அரசாங்கங்கள் அவற்றின் அதிகாரத்தையும் நிலைகளையும் பாதுகாப்பதற்கு சட்டத்தை பயன்படுத்துவதில் அல்லது சட்டத்தை மீறுவதில் நாட்டம் காட்டுவது என்பது இலங்கைக்கு மாத்திரம் பிரத்தியேகமானது அல்ல. இஸ்ரேல், பாகிஸ்தான் போன்று இலங்கையில் இருந்து கலாசார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் வேறுபட்டவையாக இருக்கும் ஏனைய நடுகளிலும் இதை காணக்கூடியதாக இருக்கிறது. அவை அந்த போக்கின் வளர்ச்சியில் வேறுபட்ட கட்டங்களில் இருக்கின்றன. இஸ்ரேல் அதில் உயர்ந்த மட்டத்தில் இருக்கிறது.

ஜனநாயகத்தை பாதுகாப்பதை பொறுத்தவரை, மக்கள் பெருமளவுக்கு நேரடியான பாத்திரத்தை வகிக்க வேண்டியிருக்கிறது போல தோன்றுகிறது. தங்களது நல்வாழ்வு மீது அக்கறை காட்டப்படாமல் இருப்பதாக அல்லது நல்வாழ்வுக்கு பாதிப்பு ஏற்படுவதாக மக்கள் உணருகின்ற கொந்தளிப்பான சூழ்நிலைகளில் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு, கோரிக்கைகளை முன்வைப்பதற்கு இருக்கக்கூடிய உரிமைகளை பாதுகாக்க அவர்கள் அமைதிவழியில் வீதியில் இறங்குகிறார்கள்.

பாகிஸ்தான் பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கிறது. பணவீக்கம் 45 சதவீதத்தையும் தாண்டிவிட்டது. வருடாந்தம் பத்து இலட்சத்துக்கும் அதிகமான பாகிஸ்தானியர்கள் நாட்டைவிட்டு வெளியேறுகிறார்கள்.

"ஆழமான அரசியல் துருவமய வேறுபாடுகள் மற்றும் பாராளுமன்றத்துக்கும் நீதித்துறைக்கும் இடையிலான இழுபறி காரணமாக உள்நாட்டு யுத்தம் ஒன்று மூளக்கூடிய ஆபத்து இருக்கிறது. இது பெரும் கவலை தருகிறது. பஞ்சாபில் மே 14 மாகாண சட்டசபை தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் தவறினால் வீதியில் இறங்கிப்போராடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று முன்னாள் பிரதமர் இம்ரான் கான் விடுத்திருக்கும் எச்சரிக்கை நாட்டில் நிலைவரங்கள் நன்றாக இல்லை என்பதை காட்டுகிறது" என்று போராசிரியர் மூனிஸ் அஹ்மர் எழுதியிருக்கிறார். இலங்கையைப் போன்றே பாகிஸ்தானிலும் தேர்தல்களை நடத்துவதற்கு பணம் இல்லை என்று அந்நாட்டு அரசாங்கம் கூறுகிறது.

"பாகிஸ்தானின் வரலாற்றில் முதற்தடவையாக தேசிய மட்டத்தில் நெறிமுறையும் பண்புகளும் பாரதூரமான அளவுக்கு சீரழிவுக்கு உள்ளாகியிருக்கின்றன. அரச நிறுவனங்களின் சீர்குலைவில் இது பிரதிபலிக்கிறது. பிரதம நீதியரசரினதும் ஏனைய நீதிபதிகளினதும் உத்தரவுகளை மதித்து நடக்க பிரதமர் தவறுகிறார் என்றால், தேர்தல் ஆணைக்குழு உச்சநீதிமன்றத்தின் உத்தரவுகளுக்கு இணங்க செயற்படாமல் அரசியலமைப்பை அப்பட்டமாக மீறுகிறது என்றால் தடுத்து நிறுத்தமுடியாத அளவுக்கு நிலைவரம் சென்றுவிட்டது என்பதே அர்த்தமாகும்.

"பாராளுமன்றம் உச்சநீதிமன்றத்தின் உத்தரவுகளுக்கு மதிப்பு அளிக்காதபோது, பொதுவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளுக்கு முரணான தங்களது நிலைப்பாடுகள் குறித்து கிஞ்சித்தும் கவலைப்படாதபோது நாட்டின் உயர்வாழ்வு நிச்சயம் ஆபத்துக்குள்ளாகிறது" என்றும் பேராசிரியர் அஹ்மர் கூறுகிறார்.

இது இலங்கையினதும் பாகிஸ்தானினதும் நிலைவரங்களில் உள்ள சமாந்தரங்களை மேலும் உணர்த்திநிற்கிறது.

### இஸ்ரேல் போராட்டங்கள்

இஸ்ரேலில் இடம்பெறுகின்ற மக்கள் போராட்டங்கள் எனக்கு 'அறகலயவை' நினைவுபடுத்துகின்றன. அமெரிக்க யூத கமிட்டியின் அழைப்பின் பேரில் கடந்தமாதம் அந்த நாட்டுக்கு நான் விஜயம் செயதேன். நான் தங்கியிருந்த ஹோட்டலுக்கு வெளியே இளம் பல்கலைக்கழக மாணவர்களும் அவர்களது பேராசிரியர்களும் அன்றையதினம் நடக்கவிருந்த போராட்டத்தில பங்குபற்றுமாறு கோரும் துண்டுப்பிரசுரங்களை வீதியில் போவோர் வருவோரிடம் விநியோகித்துக்கொண்டிருந்தனர்.

இஸ்ரேல் அரசாங்கம் பாராளுமன்றப் பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி அதற்கு அனுகூலமான முறையில் சட்டங்களை மாற்றுவதற்கு முயற்சிக்கின்றது. இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகு வசீகரமும் அனுபவமும் உடைய ஒரு தலைவர். ஆனால் அவர் இப்போது நாட்டு மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்துகின்ற கொள்கைகளையும் அணுகுமுறைகளையும் கடைப்பிடிக்கும் ஒருவராக மாறியிருக்கிறார்.

நீதிமன்றங்களில் அவருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன. அதனால் அவர் நீதிமன்றங்கள் தன்னை குற்றவாளியாக காணக்கூடியதாக அமைந்திருக்கும் சட்டங்களை மாற்றியமைப்பதற்கு பாராளுமன்ற பெரும்பான்மையை பயன்படுத்தியிருக்கிறார். நீதிபதிகளை நியமிப்பதற்கு தற்போது கடைப்பிடிக்கப்படும் சுயாதீனமான செயன்முறைக்கு பதிலாக அந்த நியமனங்களை செய்யும் அதிகாரங்களை அரசாங்கத்துக்கு வழங்கக்கூடியதாக சட்டத்தை மாற்றுவதற்கும் அவர் முயற்சிக்கிறார்.

நீதித்துறை சீர்திருத்த திட்டம் ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வழக்கு விசாரணையை எதிர்நோக்கும் நெதான்யாகுவுக்கும் இஸ்ரேலின் வரலாற்றில் மிகவும் கடும்போக்கான கூட்டணியாக அமைந்திருக்கும் அவரின் அரசாங்கத்தின் பங்காளிகளுக்கும் நீதிபதிகளை நியமிப்பதில் இறுதி அதிகாரத்தைக் கொடுக்கும்.

அந்த திட்டம் நெதான்யாகுவின் நேசக்கட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பாராளுமன்றத்துக்கு நீதிமன்றங்களின் தீர்மானங்களை மாற்றியமைப்பதற்கும் சட்டங்களை மீளாய்வு செய்வதற்கு நீதிமன்றங்களுக்கு இருக்கும் ஆற்றலை மட்டுப்படுத்துவதற்கும் அதிகாரத்தைக் கொடுக்கும். இது இலங்கையின் கடந்த வருடத்தைய நிகழ்வுப் போக்குகளை நினைவுபடுத்துவதாக அமைகிறது. உத்தேச மாற்றங்களை வர்த்தக தலைவர்கள் உட்பட இஸ்ரேலிய சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் கடுமையாக கண்டனம் செய்திருக்கிர்ர்கள்.

இந்த திட்டம் அங்கீகரிக்கப் படுமானால் கடமைக்கு சமுகமளிக்கப்போவதில்லை என்று இஸ்ரேலிய றிசேர்வ் படைகள் அச்சுறுத்தியிருக்கின்றன. அரசாங்க நிறுவனங்களின் அதிகாரங்களை ஒழுங்கமைக்கும் 'தடுப்புக்கள் மற்றும் சமப்படுத்தல்கள்' ஏற்பாடுகள் போன்ற ஜனநாயகக் கோட்பாடுகளைப் பற்றி அக்கறைப்படாத ஒரு அரசாங்கத்துக்காக தாங்கள் சண்டையிடுவதற்கு விரும்பவில்லை என்று அந்த படைகள் கூறியிருக்கின்றன.

அரசாங்கத்தின் திட்டத்துக்கு எதிராக ஆயிரக்கணக்கான மக்கள் பெரும்பாலும் மதசார்பற்ற, மத்தியதர வர்க்க இஸ்ரேலியர்கள் கிரமமாக ஆர்ப்பாட்டங்களில் இணைந்திருக்கிறார்கள்.

கடந்த வருடம் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்த அரசாங்கத்துக்கு எதிராக இலங்கை மக்கள் வீதிகளில் இறங்கி செய்த கிளர்ச்சியைப் போன்று கடந்த பதினெட்டு வாரங்களாக இஸ்ரேலில் போராட்டங்களை காணக்கூடியதாக இருக்கிறது. இது தங்களது அரசாங்கத்துக்கு எதிராக போராடுவதற்கு வீதிகளில் இறங்கமுடியும் என்று மக்கள் உணரும் ஜனநாயகத்தின் ஒரு அறிகுறியாகும். இலங்கையில் நடந்ததைப் போன்று இஸ்ரேலிய நகரங்களில் மக்கள் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு போராட்டங்களை நடத்துகிறார்கள்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருக்கும் நெதான்யாகு அரசாங்கத்துக்கு தங்களது ஜனநாயகத்தை மலினப்படுத்தக்கூடியது என்று போராட்டக்காரர்கள் நம்பும் சட்டங்களை நிறைவேற்றுவதற்கு அதிகாரம் இருக்கிறது. பெரும்பான்மையின் தீர்மானங்களுக்கு எதிராகவும் கூட எதிர்ப்பை வெளிக்காட்டிப் போராடுவதற்கான உரிமை மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்தினால் பாதுகாக்கப்படும் ஒரு அடிப்படை மனித உரிமையாகும். இந்த பிரகடனத்தில் பாகிஸ்தான், இஸ்ரேல், இலங்கை கைச்சாத்திட்டிருக்கின்றன. இதுவரையில் இஸ்ரேலிய அரசாங்கம் எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்கான மக்களின் உரிமையை மீறவில்லை.

### சர்வதேச நெருக்குதல்

எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்கான மக்களின் ஜனநாயக உரிமைகளையும் கூட குற்றச்செயலாக்கி பயங்கரவாதத்துக்கு விசாலமான வியாக்கியானத்தைக் கொடுப்பதே பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் உள்ள பிரதான பிரச்சினையாகும். தொழிற்சங்க நடவடிக்கை உள்ளடங்கலாக மக்கள் போராட்டங்கள் அரசாங்கத்தினதும் பொருளாதாரத்தினதும் உறுதிப்பாட்டுக்கு அச்சுறுத்தலாக அமைவதாகக் கூறி அவற்றை பயங்கவாதத்துக்கு சமமானவையாக்கி ஒடுக்குவதற்கான மேலதிக அதிகாரங்களைை சட்டமூல வரைவு அரசாங்கத்துக்கு வழங்குகிறது.

கடந்த வருடம் அறகலயவை ஒடுக்குவதற்கு அரசாங்கம் எடுத்த நிலைப்பாடு இதுவே.

'முறைமை மாற்றம்' ஒன்றையும் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்ததற்கு பொறுப்பான சகல தவைர்களும் பதவிவிலகவேண்டும் என்றும் கோரிநின்ற போராட்டக்காரர்களைக் கைதுசெய்வதற்கு (பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் பதிலீடு செய்ய உத்தேசிக்கின்ற ) பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டது.

ஆனால் இந்த வருடமும் நெருக்கடி தொடரும் என்றும் அது அடுத்தவருடமும் தொடர்ந்து அதற்கு அப்பாலும் செல்லும் என்றும் உலக வங்கி மிகவும் அண்மையில் மேற்கொண்ட ஆய்வு மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி வறுமையை 13.1 சதவீதத்தில் இருந்து 25 சதவீதமாக்கி இரட்டிப்பாக்கியிருக்கிறது. குடும்பங்களின் வாழ்வாதாரங்களுக்கு ஏற்படக்கூடிய பல்வேறு இடர்பாடுகளின் விளைவாக அடுத்த சில வருடங்களுக்கு வறுமை 25 சதவீதத்துக்கு மேலாக நீடிக்கும் என்று உலக வங்கி கூறுகிறது. வறுமைக் குறைப்பிலும் மனித மூலதன அபிவிருத்தியிலும் பல வருடங்களாக அடையப்பெற்ற பயன்களை பொருளாதார நெருக்கடி மறுதலையாக்கியிருக்கிறது. நெருக்கடி மேலும் சுமார் 25 இலட்சம் மக்களை வறியவர்களின் அணியில் சேர்த்திருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில் எதிர்வரும் மாதங்களில் மக்கள் போராட்டங்களும் தொழிற்சங்க நடவடிக்கைகளும் இடம்பெறக்கூடிய சாத்தியம் இருக்கிறது. இதை எதிர்கொள்வதற்கு பயங்கரவாத எதிர்ப்பு சடடத்தை அரசாங்கம் தயார் செய்கிறது. சட்டத்தரணிகள் சங்கம், சிவில் சமூக அமைப்புக்கள், தொழிற் சங்கங்கள் மற்றும் மதத்தலைவர்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் பாதுகாப்பு படைகளையும் பயங்கரவாத தடைச் சட்டத்தையும் பயன்படுத்தி அறகலயவை ஒரு சில நாட்களுக்குள் நிர்மூலம் செய்த அரசாங்கம் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூல வரைவை மறுசீரமைப்பதற்கு முன்வைக்கப் பட்டிருக்கும் யோசனைகளை கருத்தில் எடுப்பது சாத்தியமில்லை.

அக்கறை கொண்ட தரப்பினர் சட்டமூலத்துக்கு திருத்த யோசனைகளை மே 31 வரை சமர்ப்பிக்கலாம் என்று நீதியமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ச அழைத்திருக்கின்ற போதிலும் சடடத்தரணிகள் சங்கம், சிவில் சமூக அமைப்புக்கள், தொழிற் சங்கங்கள் மற்றும் மதத் தலைவர்கள் போன்ற உள்நாட்டு தரப்புகளின் யோசனைகளை அரசாங்கம் அக்கறைகாட்டி செயற்படும் என்பது சாத்தியமில்லை.

மக்களின் எதிர்ப்பு அரசாங்கத்தை பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கியிருக்கும் இஸ்ரேலின் ஜனநாயக சமுதாயத்தைப் போலன்றி இலங்கையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் பொருளாதார சலுகையை இழக்கக்கூடிய ஆபத்து போன்ற சர்வதேச நெருக்குதல்களே அரசாங்கத்தை வழிக்குக்கொண்டுவர உதவமுடியும். ●

# காணாமல்போன மாணவன் கொழும்பு பகுதியில் மீட்பு!

## பொலிஸ் விசாரணை முன்னெடுப்பு

அக்கரைப்பற்று, மே 10

சைக்கிளில் பிரத்தியேக வகுப்புக்குச் செல்வதாகக் கூறிச் சென்ற மாணவன் காணாமற் போன நிலையில் கொழும்பு, வெள்ளவத்தை பஸ் தரிப்பிடத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளமை தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள கல்முனை தலைமையக பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை மாலை சகோதரியினால் மீட்கப்பட்ட குறித்த மாணவன் தற்போது பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு கல்முனை தலைமையக பொலிஸார் அங்கு சென்றுள்ளனர்.

இந்த சம்பவத்தில் கல்முனை கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலையில் தரம்-10 இல் கல்வி பயிலும் 15 வயதுடைய உடையார் வீதியை சேர்ந்த துஸ்யந்தன் டேவிட் தக்சிதன் என்ற மாணவனே காணாமல் போனதாக அவரது பெற்றோரினால் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டிற்கமைய கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திகவின் ஆலோசனைக்கமைய கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் வழிகாட்டலில் பல பொலிஸ் குழுக்கள் காணாமல் சென்ற மாணவன் தொடர்பில் விசாரணைகளை பரவலாக முன்னெடுத்திருந்தன.

குறித்த மாணவன் சக மாணவர்களிடம் பாடசாலையை விட்டு பிற்பகல் ஒரு மணியளவில் பிஸ்கட் வாங்குவதாகக் கூறி சைக்கிளில் வெளியேறிச் செல்வது சி.சி.ரி.வி கமெரா காணொளிகளில் அவதானிக்கப்பட்ட நிலையில் துரிதமாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு சமூக ஊடகங்களிலும் காணாமல்போன மாணவன் தொடர்பான தகவலுடன் புகைப்படங்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் காணாமல் போன மாணவன் சகோதரி திங்கட்கிழமை மாலை கல்முனைப் பகுதிக்கு வருவதற்கு கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்துக்குச் சென்றபோது அங்கு தனது சகோதரன் தனிமையில் இருப்பதை கண்டு உறவினர்களுக்கு அறிவித்துள்ளார்.

இதற்கமைய உறவினர்கள் கல்முனை தலைமையக பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து மேலதிக விசாரணைக்காக கொழும்பு நோக்கி உறவினர்களுடன் கல்முனை தலைமையக பொலிஸார் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நிதிக் குழுவின் தவிசாளராக ஆளும் தரப்பினர் வரமுடியாது!

## ஹர்சன ராஜகருணா எம். பி.

கொழும்பு, மே 10

நிதிக் குழுவின் தவிசாளராக ஆளுங்கட்சியை சேர்ந்தவரை நியமிக்க முடியாது என்று பாராளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர்,

'நிதிக்குழுவின் தவிசாளர் பதவியானது பாராளுமன்றத்தில் நிதியியல் குழுவின் கட்டளைக்கு அமைவாகவே செயற்படுத்தப்பட வேண்டும்.

பாராளுமன்றத்தின் நிதிக் குழுவின் தவிசளார் பதவிக்கு எதிர்க் கட்சியை சேர்ந்த ஒருவரின் பெயரே முன்மொழியப்படவேண்டும்.

சபாநாயகரது வீட்டில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றால் அதற்காக ஒரு குழுவை அமைத்து செயற்படலாம்.

பாராளுமன்ற நிதிக்குழுவுக்கு அவ்வாறு செய்ய முடியாது.

பாராளுமன்றத்தின் நிதிக் குழுவின் தவிசாளர் பதவியானது பாராளுமன்ற நிதியில் குழுவின் கட்டளைக்கு அமைவாகவே செயற்படுத்தவேண்டும்.

ஆளுங்கட்சியை சேர்ந்த ஒருவரை அந்தப் பதவிக்கு நியமிக்க முடியாது.

எதிர்க் கட்சியிலிருந்தே ஒருவரை அந்தக் குழுவின் தவிசாளராக தெரிவு செய்ய வேண்டும்.

இவ்விடயத்தை சபாநாயகர் கவனத்தில் கொள்ள வேண்டும் - என்றார். (அ)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட முயன்ற 7 மீனவர்கள் வெடிபொருட்களுடன் கைது

மன்னார், மே 10

சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் நோக்குடன் வெளிக்கள மீன்பிடி படகு ஒன்றில் டைனமற் வெடிபொருட்களுடன் சென்ற மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் மன்னார் தென்கடல் பகுதியில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

மன்னார் நகர் கடற்கரைப் பகுதியிலிருந்து மன்னார் தென் கடல் பரப்பில் ஏழு மீனவர்கள் வெளிக்களப் படகு ஒன்றில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

வங்காலை பிரதேச கடற்படையினர் படகைச் சோதனையிட்டபோது, சட்டவிரோத முறையில் மீன்பிடிக்கு பாவிக்கப்படும் டைனமற் வெடி பொருட்கள் காணப்பட்டதால் படகுடன் ஏழு மீனவர்களையும் கைது செய்தனர்.

சந்தேக நபர்களான மீனவர்களுடன் படகையும் மற்றும் சான்றுப் பொருட்களையும் மன்னார் கடற்தொழில் திணைக்களம் பொலிஸாரிடம் சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைத்துள்ளது. மன்னார் பொலிஸார் சந்தேக நபர்களை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதுடன், நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டனர். (அ)






# நிந்தவூரில் பிறை மாநாடு

நிந்தவூர், மே. 10

கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக் குழு நடத்தும் பிறை மாநாடு ஒன்று கிழக்கிலங்கையின் நிந்தவூரில் நடைபெறவிருக்கின்றது.

இலங்கை வளி மண்டலவியல் திணைக்களத்தின் சிரேஷ்ட வானிலை அதிகாரியும், கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழு உறுப்பினருமான கலாநிதி ஏ. எம்.முஹம்மத் சாலிஹீனின் மேற்பார்வையிலும், நிந்தவூர் ஜும்ஆப்பள்ளிவாசலின் ஏற்பாட்டிலும் இந்த பிறை மாநாடு நடைபெறவுள்ளது.

முஸ்லிம் மக்களின் பிறை பார்த்தல் தொடர்பான பல்வேறு விடயங்களுக்கும் தெளிவூட்டும் வகையிலான இந்த மாநாடு எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற விருக்கின்றது.

கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழுத் தலைவர் உஸ்தாத் கலீபதுஷ் ஷாதுலி எம்.பீ. எம்.ஹிஷாம் (அல்பத்தாஹி) தலைமையில், நிந்தவூர் அல்-மஸ்ஹர் பெண்கள் உயர்தரப்பாடசாலை, மண்டபத்தில் இந்த முக்கிய மாநாடு நடைபெறும்.

இலங்கை வளிமண்டலவியல் திணைக்கள சிரேஷ்ட வானிலை அதிகாரியும், கொழும்பு பிறைக் குழு உறுப்பினருமான கலாநிதி சாலிஹீனின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் மாநாட்டின், ஆரம்பத்தில் கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழுத் தலைவர் உஸ்தாத் கலிபதுல் ஷாதுலி எம்.பீ.எம்.ஹிஷாம் (அல் பத்தாஹி) தலைமை உரை நிகழ்த்தி மாநாட்டை ஆரம்பித்து வைப்பார்.

மாநாட்டில் கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழு உப செயலாளர் மௌலவி. எம். ஆர்.அப்துல் ரஹ்மான் (அல் ஹிலாலி) "பிறையும் வானியலும்" எனும் தலைப்பிலும், கொழும்பு, பிறைக்குழு செயலாளர் உஸ்தாத் ஏ.எல்.எம்.மஸீன் அல் மக்தூமி (அல் ஹஸனி) "சர்வதேசப் பிறை" எனும் தலைப்பிலும், கொழும்பு பிறைக்குழு உறுப்பினர் உஸ்தாத் சீ.ஐ.எம்.அஸ்மீர் (அல் ஹஸனி) "பிறை விவகாரத்தில் சாட்சியத்தின் வகிபாகம்" எனும் தலைப்பிலும் பேருரைகள் ஆற்றவுள்ளனர்.

மாநாட்டின் இறுதியில் நிந்தவூர் ஜும்ஆப்பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைச் செயலாளர் மௌலவி எம்.எம்.கமறுதீன் (ஷர்க்கி) நன்றியுரையாற்றுவதுடன், கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிரதம கதீப் உஸ்தாத் எஸ்.எம்.எம்.தல்ஹா (அல் பாரி) வின் துஆ பிரார்த்தனையும் இடம்பெறும். (அ-06)

# 5 ஆயிரம் ஹெக்ரேயரில் சிறுபோக நெற்செய்கை



அம்பாறை, மே. 10

அம்பாறை மாவட்டத்தில் இவ்வருட சிறுபோக நெற்செய்கைக்கான நெல்விதைப்பு பணிகள் மும்முரமாக இடம் பெற்று வருகின்றன.

இப்போகத்தின்போது அம்பாறை மாவட்டத்தில் 65,000 ஹெக்ரேயர் நெற்காணியில் நெற்செய்கை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு உரமானிய பணத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (அ)

# துறைநீலாவணை மத்தி வெற்றி



அக்கரைப்பற்று, மே. 10

13ஆவது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் முகமாக மத்திய விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் ஒழுங்குபடுத்தப்பட்ட 32 அணிகள் பங்குபற்றிய மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி நாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் நாவிதன்வெளி 15ஆம் கிராம பாமடி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக தமிழரசுக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் கலந்து சிறப்பித்ததுடன் கௌரவ அதிதிகளாக விளையாட்டு உத்தியோகத்தர் பி. வசந், அன்னமலை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கேந்துஜன்,

நாவிதன்வெளி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.எல். அலக்ஸாண்டர், கலைமகள் மகா வித்தியாலயத்தின் அதிபர் எஸ். பிரபாகரன், விவேகானந்த மகா வித்தியாலயத்தின் அதிபர் மா. தர்மலிங்கம் மற்றும் அதிபர்களான ச. சாமித்தம்பி, எஸ் பாலசிங்கம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இவ் இறுதிச் சுற்றுப் போட்டியில் துறைநீலாவணை மத்திய விளையாட்டுக் கழகத்தினர் சம்பியன் பட்டத்தைப் பெற்றுக் கொண்டனர். (அ)

# உள்ளூர் வீதிகளிலும் தலைக்கவசம் அணியவேண்டியது அவசியமானது!

## காரைதீவு பொலிஸ் பொறுப்பு அதிகாரி ஜெகத்

அக்கரைப்பற்று, மே. 10

"உள்ளூர் வீதிகளிலும் கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும்.இது உங்கள் உயிரை மட்டுமல்ல குடும்பத்தையும் பாதுகாக்கும் .இதற்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்."

-இவ்வாறு காரைதீவு பிரதேச பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர் எஸ். ஜெகத் தெரிவித்தார்.

காரைதீவு பிரதேச போலீஸ் ஆலோசனை சபையின் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் பொலீஸ் நிலையத்தில் நடைபெற்றது .

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்-

மது அருந்திவிட்டு வாகனங்களை செலுத்தி வந்தால் தயவுதாட்சண்யமின்றி அவர்களையும், வாகனத்தையும் நீதிமன்றத்துக்கு அனுப்பவேண்டிய நேரிடும்.

அதிர்ஷ்டவசமாக காரைதீவு பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனை மிகவும் அரிதாக இருக்கின்றது.போதைப்பொருளை எனது ஊருக்குள் நுழையவிட்டால் எமது எதிர்காலமே சூனியமாகும்.எனவே ஒவ்வொருவரும் சிந்தித்து, இந்த போதைப்பொருள் நடமாட்டம் தெரிந்தால் உடனடியாக எங்களுக்கு அறிவிக்கவும். நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

எது எப்படி இருப்பினும் எமது ரோந்து சேவைகளும் எமது சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகளும் தொடரும் .அதற்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்-என்றார்.

பதிலுக்கு ஆலோசனை சபையினரும் சில ஆலோசனைகளை தெரிவித்தார்கள்.

பாடசாலை மாணவர் மத்தியில் சமாந்தரமாக செல்வது பற்றிய வீதி ஒழுங்கு முறை, போதைப்பொருள் பாவனையின் அபாயம், போன்ற விடயங்களில் விழிப்புணர்வு செயற்பாடுகளை நடத்த வேண்டும் என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. (அ)

# தென்கிழக்கு பல்கலைக்கழக 15ஆவது பொதுப் பட்டமளிப்பு

அக்கரைப்பற்று, மே. 10

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதினைந்தாவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் மே மாதம் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் நடத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் பல்கலைக்கழக மாநாட்டு மண்டபத்தில் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபுபக்கர் தலைமையில் வேந்தர் கௌரவ பாயிஸ் முஸ்தபாவின் முன்னிலையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் இரண்டு நாட்களுக்கு ஐந்து அமர்வுகளாக நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளன.

முதல் அமர்வில் கலை கலாசார, தொழில்நுட்ப பீடங்களைச் சேர்ந்த 395 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. இரண்டாவது அமர்வில் முகாமைத்துவ-வர்த்தக பீடத்தைச் சேர்ந்த 371 மாணவர்களும், மூன்றாவது அமர்வில், இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தைச் சேர்ந்த 380 மாணவர்களும் பட்டங்களை பெறவுள்ளனர்.

இரண்டாம் நாள் அமர்வில் (நான்காவது அமர்வில்) பிரயோக விஞ்ஞானங்கள், பொறியியல் ஆகிய பீடங்களைச் சேர்ந்த 332 மாணவர்கள் பட்டங்கள் பெறவுள்ளனர். ஐந்தாவது அமர்வில் கலை கலாசார, முகாமைத்துவ - வர்த்தக பீடங்களில் இணைந்து கல்வி கற்ற 374 வெளிவாரி மாணவர்களுக்கான பட்டங்கள் வழங்கப்படவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதேநேரம், வியாபார நிர்வாகம், முகாமைத்துவம், தமிழ் உள்ளிட்ட துறைகளில் பட்டப் பின்படிப்புக்களை நிறைவு செய்த மாணவர்களுக்கான முதுமாணி, முதுதத்துவமாணி பட்டங்கள் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நாட்டில் நிலவுகின்ற கோவிட்-19 அசாதாரண சூழ்நிலையினைக் கருத்திற்கொண்டு, பட்டமளிப்பு விழா நிகழ்வுகளை சுகாதார வழிகாட்டலுக்கமைய நடத்துவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் தீர்மானித்துள்ளது. (அ)

# மண் கடத்தியவர் கைது



மட்டக்களப்பு, மே. 10

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டெலிகொம் வீதியில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனையின்போது அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் மண் கடத்தலில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டதாக காத்தான்குடி பொலிஸ் நிலையப் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எச்.எம்.சியாம் தெரிவித்தார். (அ)

# சிறுவனை காணவில்லை

அக்கரைப்பற்று, மே. 10

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையில் தரம் 10இல் கல்வி கற்று வருகின்ற ட்ரெவிஷ் தக்சிதன் (வயது-15) சிறுவன் பாடசாலையின் பிரத்தியேக வகுப்புக்குச் சென்ற நிலையில் 07 ஆம் திகதி காணாமல்போயுள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி பாடசாலையில் நடைபெற்ற பிரத்தியேக வகுப்புக்குச் சென்ற சிறுவன் பகல் 1.30 மணியளவில் வகுப்பிலிருந்து பிஸ்கட் வாங்கக் கடைக்குச் சென்றதாக நண்பர்கள் தெரிவிக்கின்றனர்.

சிறுவனின் உயரம் 4 அடி 5 அங்குலம் உடையவர் என்பதுடன் சிறுவன், காணாமல்போகும் போது கார்மேல் பற்றிமா கல்லூரியின் பெயர் பொறிக்கப்பட்ட நீல நிற ரீசேட் அணிந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஹெய்ட்டியில் கடந்த மாதம் வன்முறைகளால் 600 பேர் பலி!

**ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் தகவல்**

போர்ட் ஒவ் பிரின்ஸ், மே. 10

**ஹெய்ட்டியில் இடம்பெற்ற வன்முறைகளால் கடந்த மாதம் 600 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர் என ஐ.நா தெரிவித்துள்ளது.**





தலைநகரின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட கடும் வன்முறைகள் காரணமாக ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் 600 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர் என மனித உரிமைகளுக்கான ஐ.நா ஆணையாளரின் அலுவலகம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

ஹெய்ட்டியில் இவ்வருடம் முதல் 3 மாதங்களில் 846 பேர் கொல்லப்பட்டதுடன் 393 பேர் காயமடைந்தனர், மேலும் 395 பேர் கடத்தப்பட்டதாகவும் அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளது.

அமெரிக்கக் கண்டத்தின் மிக வறிய நாடான ஹெய்ட்டி, 2021 ஜூலையில் ஜனாதிபதி ஜோவேனெல் மோய்ஸ் படுகொலை செய்யப்பட்டதையடுத்து, அரசியல், பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது. தலைநகர் போர்ட் ஒவ் பிரின்ஸ் பகுதிகள் பல்வேறு குழுக்களின் கட்டுப்பாட்டில் உள்ளன.

(அ)

# காஸாவில் இஸ்ரேலின் தாக்குதலில் 9 பொதுமக்கள் உட்பட 12 பேர் பலி!



காஸா, மே. 10

பலஸ்தீனத்தின் காஸா பிராந்தியத்தில் இஸ்ரேல் நேற்று அதிகாலை நடத்திய வான்வழித் தாக்குதல்களில் 12 பேர் உயிரிழந்துள்ளனர் என காஸாவிலுள்ள சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பெண்கள், சிறார்களும் உயிரிழந்தவர்களில் அடங்கியுள்ளனர் என அவ்வமைச்சு தெரிவித்துள்ளது.

இஸ்லாமிய ஜிஹாத் இயக்கத்தினரை இலக்கு வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தனது இயக்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் மூவர் உயிரிழந்துள்ளனர் என இஸ்லாமிய ஜிஹாத் இயக்கம் தெரிவித்துள்ளது.

இஸ்லாமிய ஜிஹாத் அங்கத்தவர்களின் மனைவிமார், பிள்ளைகளும் உயிரிழந்தவர்களில் அடங்கியுள்ளனர் என செய்திகள் வெளியாகியுள்ளன. மேலும் 20 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 2.00 மணியளவில் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

(அ)

# உக்ரைன் மீது மீண்டும் ஏவுகணைத் தாக்குதல்!

கீவ், மே. 10


உக்ரைன் மீது புதிய தொடர் ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல்களை ரஷ்யா மேற்கொண்டுள்ளது.

தலைநகர் கீவில் நள்ளிரவுக்கு பின்னர் வெடிப்பு சத்தங்கள் கேட்டதாகவும் ட்ரோன் தாக்குதலொன்றில் குறைந்தது ஐவர் காயமடைந்துள்ளதாகவும் குறித்த நகர மேயர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தெற்கு பிராந்தியத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதேவேளை, தமது களஞ்சியசாலை தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாக உக்ரைன் செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இரண்டாம் உலகப்போரில் நாசி ஜெர்மனியை தோற்கடித்த வெற்றி விழாவை ரஷ்யா கொண்டாடுவதற்கு 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட தாக்குதலாக இது அமைந்துள்ளது.



கடந்த சில மாதங்களாக ரஷ்யா மேற்கொள்ளும் தாக்குதல்களில் சிவிலியன்களின் நிலைகளே இலக்கு வைக்கப்படுவதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

(அ)



# 276 நாட்களுக்குப் பின்னர் சீனாவின் விண்கலம் பூமியில் தரையிறங்கியது

பீஜிங், மே. 10

276 நாட்கள் விண்வெளியில் தங்கிய சீனாவின் சோதனை ஆய்வு விண்கலம் பூமிக்கு திரும்பியுள்ளது.

இந்த ஆளில்லா விமானம் சீனாவில் உள்ள ஜியுகுவான் விண்வெளி மையத்தில் வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் இந்த ஆய்வு மூலம் மேற்கொள்ளப்பட்ட சோதனைகள் அல்லது வேறு எந்த தகவலையும் சீனா இது வரை பகிரங்கப்படுத்தவில்லை என்று வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சீனாவின் மறுபயன்பாட்டு விண்வெளி தொழில்நுட்பங்களை சோதிக்கும் ஒரு முக்கிய பணியை முடித்துள்ளதாக சீனாவின் அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

(அ)

# பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் புதிய ஒப்பந்தம் கைச்சாத்து!



இஸ்லாமாபாத், மே. 10

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானின் தலிபான் அரசாங்கம், தங்கள் எல்லையில் வர்த்தகத்தை அதிகரிக்கவும், பதற்றங்களைக் குறைக்கவும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் பிலாவல் பூட்டோ சர்தாரி மற்றும் ஆப்கானிஸ்தானின் தலிபான்களால் நியமிக்கப்பட்ட வெளியுறவு அமைச்சர் அமீர் கான் முத்தாகி ஆகியோர் இஸ்லாமாபாத்தில் ஒப்பந்தத்தை மேற்கொண்டதாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இரு தரப்பு வர்த்தகத்தை மேம்படுத்தவும், பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடவும், இருதரப்பு உறவுகளை மேம்படுத்தவும் இந்த ஒப்பந்தம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சக அறிக்கையின்படி, பூட்டோ ஜர்தாரியும் முத்தாகியும் "அமைதி மற்றும் பாதுகாப்பு, அத்துடன் வர்த்தகம் மற்றும் இணைப்பு உள்ளிட்ட பரஸ்பர அக்கறையின் முக்கிய பிரச்னைகள் குறித்து நேர்மையான மற்றும் ஆழமான பரிமாற்றத்தை நடத்தினர்"-என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# சேகுவேராவை கைது செய்த பொலிவிய ஜெனரல் மரணம்



லா பாஸ், மே. 10

கியூபப் புரட்சியாளர் எர்னஸ்டோ சேகுவேராவை பிடித்த பொலிவிய ஜெனரல் கரி பிராடோ சல்மொான் 84 வயதில் மரணித்துள்ளார்.

அமெரிக்க இரகசிய சேவையின் ஆதரவுடன், 1967 இல் சல்மொன் தலைமையிலான இராணுவ நடவடிக்கை ஒன்றிலேயே செகுவேராவின் ஏற்பாட்டில் நடந்த கம்யூனிச கிளர்ச்சி ஒன்று தோற்கடிக்கப்பட்டது.

அப்போது பொலிவியாவில் வலதுசாரி இராணுவ அரசு ஒன்றே ஆட்சியில் இருந்தது.

இந்நிலையில் ஆர்ஜென்ரீனாவில் பிறந்த சேகுவேரா கைது செய்யப்பட்ட மறு நாளே இராணுவ அதிகாரி ஒருவரால் கொலை செய்யப்பட்டார். இதில் சேகுவேராவை கொன்றவர் என நம்பப்படும் பொலிவிய அதிகாரி மரியோ டெரான் கடந்த ஆண்டு மரணித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# இறுதி பந்து வரை பரபரப்பு; கொல்கத்தா 'த்ரில்' வெற்றி!

கொல்கத்தா, மே 10

பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி இறுதிப் பந்தில் வெற்றிபெற்றது.

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் நேற்று முன் தினம் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் கொல்கத்தா நைற் ரைடர்ஸ், பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அணித் தலைவர் ஷிகர் தவான் பொறுப்புடன் ஆடி ஓட்டங்களை குவித்தார். ஆனால், மறு முனையில் சீரான இடைவெளியில் விக்கெட்கள் சரிய, மற்றவர்கள் யாரும் பெரிதாக ஓட்டங்கள் சேர்க்க முடியவில்லை.

அந்த அணியின் முக்கிய வீரர்களான பிரப்சிம்ரன் சிங் 12, லியாம் லிவிங்ஸ்ரன் 15 , ஜிதேஷ் சர்மா 21, ஷாருக் கான் 21, ஹர்பிரீத் பிரார் 17, ரிஷி தவான் 19 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். ஷிகர் தவான் 57 ஓட்டங்கள் சேர்த்தார். இதனால் பஞ்சாப் கிங்ஸ் அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 179 ஓட்டங்கள் குவித்தது.




கொல்கத்தா நைற் ரைடர்ஸ் தரப்பில் வருண் சக்கர வர்த்தி 3 விக்கெட்கள், ஹரிஷ் ராணா 2 விக்கெட் கள் வீழ்த்தினர்.

180 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கொல்கத்தா அணியின் தலைவர் நிதிஷ் ராணா பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 51 ஓட்டங் கள் எடுத்து ஆட்டமிழந்தார். அவருக்கு முன்னதாக ஜசன் றோய் 38 ஓட்டங்கள் எடுத்து நம்பிக்கை அளித்தார்.

ரஹ்மனுல்லா குர்பாஸ் 15 ஓட்டங்களும், வெங்கடேஷ் ஐயர் 11 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தாலும், இறுதிக்கட்டத்தில் ரஸல் 42 ஓட்டங்களும், ரிங்கு சிங் 21 ஓட்டங்களும் எடுக்க, 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 182 ஓட்டங்கள் சேர்த்து கொல்கத்தா அணி வெற்றி பெற்றது. கொல்கத்தா அணி கடைசி பந்தில் த்ரில் வெற்றி பெற்றது. கடைசி பந்துக்கு முன்னதாக ரஸல் ஆட்டமிழக்க ஆட்டத்தில் பரபரப்பு தொற்றிக் கொண்டது. எனினும், கடைசி பந்தில் ரிங்கு சிங் பௌண்ட்ரி அடித்து அணியை வெற்றிபெறச் செய்தார். (ஐ)




## 'லோரியஸ்' விருதை வென்றார் மெஸ்ஸி!

பாரிஸ், மே 10

ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரருக்கான லோரியஸ் விருதை வென்றுள்ளார் ஆர்ஜென்ரீனா உதைபந்தாட்ட அணியின் தலைவர் லயனல் மெஸ்ஸி.

பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் நடைபெற்ற லோரியஸ் விருது வழங்கும் விழாவில் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

ஒவ்வோர் ஆண்டும் விளையாட்டு உலகில் சிறந்து விளங்கும் வீரர், வீராங்கனை மற்றும் அணிக்கு லோரியஸ் விருது வழங்கப்பட்டு வருகிறது. 2000ஆம் ஆண்டு முதல் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு ஆர்ஜென்ரீனா அணி உதைபந்தாட்ட உலகக் கிண்ணத்தை வென்று அசத்தி இருந்தது. இதனால் ஆண்டின் சிறந்த அணிக்கான விருதை ஆர்ஜென்ரீனா வென்றது. இதன் மூலம் தனிநபர் மற்றும் அணி என இரண்டு விருதுகளை மெஸ்ஸி இந்த முறை வென்றுள்ளார். கடந்த 2020இல் லூயிஸ் ஹமில்டனுடன் இணைந்து சிறந்த விளையாட்டு வீரருக்கான லோரியஸ் விருதை மெஸ்ஸி பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## ஐ. பி. எல். தொடரில் தவான் 50 அரைச்சதங்கள் எட்டினார்

சென்னை, மே 10

ஐ. பி. எல். தொடரில் 50 அரைச் சதங்களை அடித்த மூன்றாவது வீரர் என்ற பெருமையை ஷிகர் தவான் பெற்றுள்ளார்.

ஐ.பி.எல். போட்டியில் கொல்கத்தாவில் நேற்று முன் தினம் நடந்த போட்டியில் கொல்கத்தா அணி பஞ்சாப்பை வெற்றி கொண்டது.

இந்தப் போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணியின் தலைவர் ஷிகர் தவான் 47 பந்துகளில் 9 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 57 ஓட்டங்களை எடுத்தார்.

ஐ. பி. எல். தொடரில் இது அவரின் 50ஆவது அரைச் சதமாகும். 213 இன்னிங்ஸ்களில் அவர் 50 அரைச்சதங் களை எடுத்துள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் 50ஆவது அரைச்சதம் அடித்த 3ஆவது வீரர் என்ற பெருமையையும் தவான் பெற்றுள்ளார்.

முன்னதாக, டேவிட் வோர்ணர் 57 அரைச்சதங்களுடன் முதலிடத்தில் உள்ளார். விராட் கோலி 50 அரைச் சதங்களை எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்; ராகுலுக்கு பதிலாக கிஷன்!

மும்பை, மே 10

எதிர்வரும் ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான இந்திய அணியில் காயமடைந்த கே. எல். ராகுலுக்கு மாற்றாக இளம் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான இஷான் கிஷன் இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி. சி. சி. ஐ) இதனை அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்கு எதிராக வரும் ஜூன் 7ஆம் திகதி இங்கிலாந்தில் உள்ள ஓவல் கிரிக்கெட் மைதானத்தில் இந்த இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது. கடந்த மாதம் 25ஆம் திகதி இந்த போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டது.

நடப்பு ஐ. பி. எல். தொடரில் லக்னோ அணியை வழிநடத்தி வந்த ராகுல், பெங்களூர் அணிக்கு எதிரான லீக் போட்டியில் காயமடைந்தார். அவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் அவர் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இருந்து விலகியுள்ளார்.



இந்த நிலையில், அவருக்கு பதிலாக 24 வயதான இஷான் கிஷன் அணிக்கு உள்வாங்கப்பட்டுள்ளார். விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான கிஷன், கடந்த 2021 முதல் இந்திய அணிக்காக இருபது -20 மற்றும் ஒருநாள் கிரிக்கெட்டில் விளையாடி வருகிறார்.

49 முதல் தர கிரிக்கெட் போட்டி மற்றும் 91 லிஸ்ட் ஏ போட்டிகளில் அவர் விளையாடியுள்ளார். உள்ளூர் கிரிக்கெட்டில் ஜார்கண்ட் அணிக்காக விளையாடி வருகிறார். நடப்பு ஐ. பி. எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார்.

இந்திய அணி விவரம்: ரோஹித் சர்மா (அணித் தலைவர் ), ஷுப்மன் கில், புஜாரா, விராட் கோலி, ரஹானே, கே. எஸ். பரத் (விக்கெட் காப்பாளர்), அஸ்வின், ஜடேஜா, அக்சர் பட்டேல், ஷர்துல் தாகூர், முகமது ஷமி, சிராஜ், உமேஷ் யாதவ், ஜெயதேவ் உனத்கட், இஷான் கிஷன் (விக்கெட் காப்பாளர்). (ஐ)




## ஆர்ச்சருக்கு பதிலாக இணைகிறார் ஜோர்தன்

மும்பை, மே 10

நடப்பு ஐ. பி. எல். தொடரில் இங்கிலாந்தின் கிறிஸ் ஜோர்தன் மும்பை இந்தியன்ஸ் அணியுடன் இணைந்துள்ளார்.

நடப்பு ஐபிஎல் சீசனில் எஞ்சியுள்ள போட்டிகளில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாட இங்கிலாந்து நாட்டின் கிறிஸ் ஜோர்தன் தெரிவாகியுள்ளார். மும்பை அணியின் ஜோப்ரா ஆர்ச்சருக்கு மாற்றாக அவர் இணைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மும்பை இந்தியன்ஸ் அணி நிர்வாகம் சமூக வலைதளத்தில் இந்தத் தகவலை பகிர்ந்துள்ளது.

நடப்பு ஐ. பி. எல். தொடரில் மும்பை அணிக்காக 5 போட்டிகளில் விளையாடி 2 விக்கெட்களை கைப்பற்றிய ஆர்ச்சருக்கு, முழங்கை பகுதியில் சிறிய அளவிலான சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால், அவர் நாடு திரும்புகிறார்.

இந்நிலையிலேயே அவருக்கு பதிலாக 34 வயதான ஜோர்தனை மும்பை ஒப்பந்தம் செய்துள்ளது. இவர், இதுவரை சென்னை சுப்பர் கிங்ஸ் உட்பட 4 ஐ. பி. எல். அணிகளில் விளையாடி உள்ளார். மொத்தம் 28 போட்டிகளில் விளையாடி 27 விக்கெட்களை கைப்பற்றியுள்ளார். (ஐ)

# திருடர்களை பாதுகாப்பதை ஜனாதிபதி நிறுத்தவேண்டும்

## சமிந்தர விஜேசிறி எம்.பி. கோரிக்கை

கொழும்பு, மே 10

**திருடர்களை பாதுகாப்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக நிறுத்த வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சமிந்தர விஜேசிறி தெரிவித்துள்ளனர்.**



ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றக்கூடிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவேண்டியது அவசியம். அதற்கான சந்தர்ப்பத்தை ஜனாதிபதி வழங்கவேண்டும். தற்போதைய அரசாங்கத்தின் திருடர்களை ஜனாதிபதி கைது செய்ய போவதில்லை.

இந்த திருட்டுகளின் காரணமாக நாடு வங்குரோத்து அடைய போகின்றது. நாடு சீரழிகின்றது. நாட்டு மக்கள் துன்பத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதற்கு தீர்வுதான் என்ன?

திருடர்களுக்கு தண்டனை வழங்காவிட்டால் அவர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளையாவது ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டும்.

மக்கள் ஆணையை நிருபிப்பதற்கான வேலைத்திட்டங்களை ஜனாதிபதி முன்னெடுக்க வேண்டியது அவசியமா இல்லையா?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் ஜனாதிபதியாக நியமிக்கப்படுவதற்கு காரணமான திருடர்களை பாதுகாக்கும் பணிகளையே மேற்கொண்டு வருகின்றார்-என்றார். (அ)

# 1,896 டெங்கு நோயாளர்கள் இலங்கையில் அடையாளம்

கொழும்பு, மே. 10

இலங்கையில் மே முதல் வாரத்தில் 1,896 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கடந்த மாதத்தின் இறுதி வாரத்துடன் ஒப்பிடுகையில், இம்மாதத்தின் முதல் வாரத்தில் கம்பஹா மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

இவர்களில் அதிகமானோர் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா போன்ற அதிக நோயாளர்கள் பதிவாகும் மாவட்டங்களுக்கு நிதியளித்து விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

பருவ மழையை எதிர்கொள்ளும் வகையில் மக்கள் தமது வீடு களையும் சுற்றுப்புறங்களையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும்- என்றார். (அ)

# அரச வைத்தியசாலைகளில் இனிமேல் கட்டணம் செலுத்தும் சிகிச்சை அறை!

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மே. 10

அரச வைத்தியசாலைகளில் கட்டணம் செலுத்தும் சிகிச்சை அறைகளை ஸ்தாபிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டவருக்காக, நாடாளாவிய ரீதியிலுள்ள வைத்தியசாலைகளில் இவ்வாறான கட்டணம் செலுத்தும் அறைகள் அமைக்கப்படவுள்ளன.

அரசாங்க வைத்தியசாலைகளில் கட்டணம் செலுத்தும் சிகிச்சை அறைகள் அறிமுகப்படுத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 2023 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு முன்மொழிவில் தெரிவித்திருந்தார்.

தனியார் வைத்தியசாலைகளில் செலவு அதிகமாக இருப்பதால், அரச வைத்தியசாலைகளிலும் கட்டணம் செலுத்தும் அறைகளை அமைக்குமாறு பொது மக்கள் வைத்த கோரிக்கைக்கு அமைய இந்த திட்டம் முன்மொழியப்படுவதாக ஜனாதிபதி பாதீட்டு உரையில் தெரிவித்தார்.

அதன்படி, முதற்கட்டமாக தேசிய வைத்தியசாலைகளில் இந்த கட்டணம் செலுத்தும் முறைமை அறிமுகப்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாணவருக்கு போதைப்பொருள் விற்பனை செய்தவர் சிக்கினார்

கொழும்பு, மே. 10

பாடசாலை மாணவர்களுக்கும் மேலதிக வகுப்பு மாணவர்களுக்கும் கஞ்சா கலந்த போதைப் பொருள் மற்றும் போதை மாத்திரைகளை விற்பனை செய்த ஒருவர் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டார் என பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

சந்தேகநபருடன், கஞ்சா கலந்த 25 போதைப்பொருள், 202 போதை மாத்திரைகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் மூலம் சம்பாதித்த 20,500 ரூபா பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

விசேட அதிரடிப்படை தலைமையக அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் இந்த சுற்றிவளைப்பு நடத்தப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கொழும்பு 15, அளுத் மாவத்தை வீதியில் வசிக்கும் 47 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ரணிலுடன் சஜித் தொலைபேசியில் பேச்சு; மத்திய வங்கிச்சட்ட விவாதம் ஒத்திவைப்பு



கொழும்பு, மே. 10

மத்திய வங்கிச் சட்டம் தொடர்பான விவாதத்தை பாராளுமன்றத்தில் ஒத்திவைக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

குறித்த சட்டமூலத்தை ஒத்திவைத்து இணக்கப்பாட்டுடன் செயற்பட சந்தர்ப்பம் வழங்குமாறு ஜனாதிபதிக்கு அவர் நேற்றுக் காலை தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

தனது கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார் எனவும், அதற்கான உடன்பாட்டை பாராளுமன்றத்தில் அறிவிக்குமாறு ஜனாதிபதி தமக்கு அறிவித்தார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை மத்திய வங்கிச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு இந்த வாரம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படாது என பிரதமர் தினேஷ் குணவர்தனவும் நேற்று காலை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த வாரம் இலங்கை மத்திய வங்கிச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்திற்கான திகதிகளை பாராளுமன்ற அலுவல்கள் குழு நிர்ணயித்தது.

இதற்கமைய மே 11 ஆம் திகதி காலை 9.30 மணி முதல் மாலை 6 மணி வரை விவாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

# பௌத்த, முஸ்லிம், கிறிஸ்தவ மதத்தவர்கள் வழிபாட்டிடம் அமைக்கச் சட்டங்கள் தேவை

## சுட்டிக்காட்டுகிறார் மறவன்புலவு க. சச்சிதானந்தன்



யாழ்ப்பாணம், மே. 10

நிலத்தையும் நீரையும் காற்றையும் வானையும் நெருப்பையும் வழிபடச் சட்டம் எங்கே தேவை? அவற்றுக்கான குறியீடுகளான பாம்பும் வேம்பும் மயிலும் வேலும் சூலமும் சிவபெருமானும் பிள்ளையாரும் முருகனும் அமையச் சட்டங்கள் ஏன் தேவை?

புதிதாக வந்தவர் புத்தர். புதிதாக வந்தவர் இயேசு. புதிதாக வந்தவர் முகமது. இவர்கள் சார்ந்த வழி பாட்டிடங்கள் அமைக்கச் சட்டங்கள் தேவை என சுட்டிக்காட்டியுள்ளார் சிவ சேனையின் மறவன்பு லவு க. சச்சிதானந்தன்.

அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த குறிப்பில்-

இலங்கை சிவபூமி. பாம்பையும் வேம்பையும் கல்லையும் மண்ணையும் நீரையும் தீயையும் வானை யும் காற்றையும் சிவனாக வழிபடுவோர் சைவர். இயற்கையை, ஐம்பூதங்களை, சிவபெருமானாகக் கொள்வோர் சைவர்.

நாகர்களாய் இயக்கர்களாய் தமிழர்களாய் சைவர் களாய் இலங்கையின் ஆதி குடிகளாய் வாழ்கின்ற மக்களுக்கு இயற்கையே கடவுள்.

தாயின் கருவறையில் வினை வழிப் பிறந்த மனி தரைக் கடவுளாகத் தமிழர் கொள்வதில்லை, சைவர் கொள்வதில்லை.

புத்தரையும் இயேசுவையும் முகமதுவையும் வழி பாட்டிடங்கள் அமைத்தே வழிபடவேண்டும்.

சைவர்களுக்கு தமிழர்களுக்கு நிலமே கோயில் நீரே கோயில் காற்றே கோயில் வானமே கோயில் நெருப்பே கோயில்.

எனவே தமிழர்கள் சைவர்களின் கோயில்கள் அரசுகளின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுக் கட்டப்பட்டவை அல்ல. எத்திசைச் செல்லினும் சைவர்களுக்கு அத்திசை கோயிலே.

வினை வழி கருவறையில் பிறந்து தெளிவு பெற்றவர்கள் போதித்தவர்கள் வழிவந்த மதங்கள் யாவும் இலங்கைக்கு வந்தேறி மதங்கள். அரசுகளின் சட்ட திட்டங்களுக்கு அமைய வழி பாட்டிடங்கள் அமைக்கும் மதங்கள்.

மேற்கத்திய மத மாற்றிகளின் பரப்புரை மதமாற்ற உத்திகளில் ஒன்று Planting Churches. ஆசிய ஆபிரிக்க நாடுகளில் மக்களிடையே Planting churches உத்தியைப் பயன்படுத்துமாறு கோடிக் கணக்கில் பணம் வழங்கும் மதமாற்றச் சபைகள் ஆலோசனை சொல்கின்றன.

அதே உத்தியை இலங்கையில் புத்த மத மேலாதிக்க வாதிகள் கடைப்பிடிக்கிறார்கள்.

புத்த மதத்தவர் குடியேற்றம், சைவ மக்களின் நிலம் அபகரிப்பு, தொல்லியல் போர்வை, இவை காரணங்களாக அமையத் தான் தோன்றியாக அமைந்த சைவக் கோயில்களின் அருகே புத்த கோயில்களை அமைக்கிறார்கள் சரத் வீரசேகரர் உள்ளிட்ட புத்த மேலாதிக்க வாதிகள்.

இவர்கள் கேட்கிறார்கள், தென் இலங்கையில் அமைந்த சைவக் கோயில்கள் சட்டத்துக்குள் அமைந்தனவா? என.

நிலத்தையும் நீரையும் காற்றையும் வானையும் நெருப்பையும் வழிபடச் சட்டம் எங்கே தேவை?

அவற்றுக்கான குறியீடுகளான பாம்பும் வேம்பும் மயிலும் வேலும் சூலமும் சிவபெருமானும் பிள்ளையாரும் முருகனும் அமையச் சட்டங்கள் ஏன் தேவை?

புதிதாக வந்தவர் புத்தர். புதிதாக வந்தவர் இயேசு. புதிதாக வந்தவர் முகமது. இவர்கள் சார்ந்த வழிபாட்டிடங்கள் அமைக்கச் சட்டங்கள் தேவை.

படைத் துறையில் வல்லவராக இருப்பவர், தத்துவத் துறையில் வல்லவராக சட்டத் துறையில் வல்லவராக இருப்பதில்லை என்பதை சரத் வீரசேகரரின் கூற்றுகள் தெளிவாகக் காட்டியுள்ளன -என்றுள்ளது. (அ)

## தமிழர்களின்...

ஊடாக, தமிழ்மக்களின் குடிப்பரம்பலை அடி யோடு அழிப்பதற்கான அனைத்து முயற்சிகளை யும் தொடர்ந்து முன்னெடுப்பதை சிங்கள இன வாத அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் - என்று இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய அவர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் சிங்கள - பௌத்த மயமாக்கல் தொடர்பான தரவுகளுடன்கூடிய அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்திருந்தார்.

உரையாற்றிய சிறீதரன் எம். பி.,

சிங்கள பேரினவாத அரசாங்கம் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்டு மேற்கொண்ட 30 வருட கால யுத்தம் நிறைவடைந்த பின்னணியிலும் பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்புகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தீவிரமடைந்துள்ளன. தமிழர்களின் மத உரிமைகள் மற்றும் முஸ்லிம், கிறிஸ்தவ மக்களின் மத உரிமைகள் பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்தி அழிக்கப்படுகிறது. இதற்கு தொல்பொருள் திணைக்களம் முழுமையாக ஒத்துழைப்பு வழங்குகிறது .

முழு நாடும் பொருளாதாரப் பாதிப்பில் பாதிக்கப்பட்டுள்ள பின்னணியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் சிங்கள மற்றும் பௌத்த கடும்போக்கான ஆக்கிரமிப்புக்குள் சிக்குண்டு தவிக்கிறார்கள். அவரவர் உரிமைகளை அவரவருக்கு வழங்குங்கள். தமிழர்களின் பூர்வீக உரிமைகளை தொல்பொருள் என்று குறிப்பிட்டுக் கொண்டு கையகப்படுத்துவதை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் கோயில்கள், காணிகள், புராதன சின்னங்கள் பௌத்த மயமாக்கலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார். அத்துடன், ஆக்கிரமிப்புக்கு உள்ளான பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயம், வெடுக்கு நாறி ஆதிலிங்கேஷ்வரர் ஆலயம், குருந்தூர் மலை, உருத்திரபுரம் சிவன் கோயில், மண்ணித்தலை சிவன் கோயில், திருக்கோணேச்சரம், கன்னியா வெந்நீரூற்று, அரிசிமலை, திருமங்களாய் சிவன் ஆலயம், திரியாய் காணி அபகரிப்பு குச்சவெளியில் அமைக்கப்படும் 31 விகாரைகள் என 37 இடங்களின் தரவுகளை வெளிப்படுத்தினார்.

மேலும், போர் முடிந்து 13 ஆண்டுகள் கடந்தும் யாழ்ப்பாணத்தில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் - கீரிமலையில் இருந்த ஆதிலிங்கேஸ்வரர்ஆலயம் மற்றும் சடையம்மா மடம் என்பவற்றோடு அங்கிருந்த இந்துமத அடையாளங்கள் இடித்து அழிக்கப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டினார். அத் துடன், இங்கு நடைபெறும் பௌத்த ஆக்கிரமிப்பு குறித்தும் தரவுகளுடன் வெளிப்படுத்தினார்.

## துப்பாக்கி...

பட்டதாக அவர் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மே 10ஆம் திகதி தீ வைக்க 100 வீடுகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தியின் சில பாராளுமன்ற உறுப் பினர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் இந்த பட்டியலில் முதலிடத்தில் இருந்தனர்.

“தகவல் அறிந்ததும், பாதுகாப்பு செயலாளருக்குத் தெரிவித்தோம், கண்டால் துப்பாக்கிச் சூடு நடத்த ஆயுதப் படையினருக்கு உத்தரவிட வேண்டும் எனத் தெரிவித்தோம். அவர்கள் மூன்று துப்பாக்கிச் சூடுகளை நடத்தினர். ரத்கமவில் ஒன்று, அங்கொடை மற்றும் கோட்டையில் இரண்டு. இந்த மூன்று துப்பாக்கிச் சூடுகளும் நடந்திருக்காதுவிடின், குறைந்தது நூறுக்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு இருக்கும்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனபாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் மற்றும் அலுவலகங்கள் தயாரிக்கப்பட்ட ஒரு பட்டியல் மூலம் மே 9 ஆம் திகதி அழிக்கப்பட்டது என்றும் அமைச்சர் மேலும் தெரி வித்தார். (ஐ)

## பௌத்த...

மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இலங்கை சிங்கள - பௌத்த நாடு என்பதற்கு வரலாற்று ரீதியில் பல சான்றுகள் உள்ளன. பௌத்த தொல் பொருள் சின்னங்கள் நாடு முழுவதும் காணப்படுகின்றன. ஆகவே, பௌத்த மத உரிமைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இலங்கையில் வாழும் அனைவருக்கும் உண்டு.

வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் பிரிவினைவாத அரசியல்வாதிகள் பௌத்த மதத்துக்கும் பௌத்த புராதன தனித்துவத்துக்கும் எதிராக திட்டமிட்ட வகையில் செயல்படுகிறார்கள். பௌத்த மதத்தை அழிக்கிறார்கள். சிங்களவர்கள் பிற மதங்களை அழிக்கவில்லை என்பதை உறுதியாக குறிப்பிட வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த சின்னங்களை பிரிவினைவாத தமிழ் அரசியல்வாதிகள் திட்டமிட்டு அழிக்கிறார்கள். பௌத்த மத வழிபாடுகளுக்கு பல்வேறு வழிகளில் தடை ஏற்படுத்துகிறார்கள். வெடுக்கு நாறி பகுதியில் பௌத்த புராதான சின்னங்கள் அழிக்கப்பட்டு அதன்மீது சிவலிங்கம் உட்பட விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

வடக்கில் யுத்தம் தீவிரமடைந்த காலத்தில் கொழும்பில் இந்துக்கள் மத வழிபாடுகளில் ஈடுபட்டார்கள், தேர் இழுத்தார்கள், சிங்கள பௌத்தர்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள். ஆகவே, சிங்களவர்களின் பொறுமைக்கும் எல்லையுண்டு. அந்த பொறுமையை தமிழ் பிரிவினைவாத அரசியல்வாதிகள் சோதிக்கக்கூடாது.

தமிழ் அரசியல்வாதிகளுடன் பேச்சில் ஈடுபட முன்னர் நாட்டில் இனப்பிரச்னை என்பதொன்று உள்ளதா என்பதை ஜனாதிபதி ஆராய வேண்டும். இல்லாத பிரச்னைகளை தோற்றுவித்து அதனை இனப்பிரச்னை என்று தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிட்டு கொள்கிறார்கள்.

ஆகவே, பௌத்த மத மரபுரிமைகளை பாதுகாக்க ஜனாதிபதி விசேட கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ஐ)

## கிணற்றில்...

தந்தை வேலைக்கு சென்றிருந்த நிலையில், தாயார் வீட்டு வேலைகளை செய்து கொண்டிருந்தார். இந்த நிலையில், வீட்டின் வளவில் இருந்த பாதுகாப்பற்ற கிணற்றுக் குள் குழந்தை தவறி விழுந்துள்ளது.

குழந்தையை காணாத தாய் தேடிய போது கிணற்றுள் குழந்தை விழுந்ததை கண்டு அயலவர்களின் உதவியுடன் மீட்டு தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு குழந்தையை சேர்ப்பித்தார்.

அங்கு, குழந்தையை பரிசோதித்த மருத்துவர் கள் ஏற்கனவே இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

மரண விசாரணை களை திடீர் மரண விசாரணை அதிகாரி ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ஐ-03)

## முள்ளிவாய்க்கால்...

யாழ்ப்பாணம் நகரப் பகுதி, காரைநகர், மருதனார்மடம், சாவகச்சேரி பேருந்து நிலையம் எனப் பல பகுதிகளில் பொது மக்கள், வர்த்தக நிலையங்களில் அரிசி சேகரிக்கப்பட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டு பொதுமக்களுக்கும் வீதியில் சென்றவர்களுக்கும் வழங்கப்பட்டது.

இதன்போது முள்ளிவாய்க்கால் கஞ்சி தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் துண்டுப்பிரசுரங்களும் மாணவர்களால் விநியோகிக்கப்பட்டன.

நேற்று ஆரம்பமான முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இன்று கிளிநொச்சியிலும் தொடர்ந்து தமிழ் மக்களின் தாயகப் பகுதியான வடக்கு, கிழக்கு மாகாணங்கள் முழுவதும் எதிர்வரும் 15ஆம் திகதி வரை விநியோகிக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02-03)

(தொடர்புடைய செய்திகள் உள்ளே)

# சிறீ லங்கன் எயார்லைன்ஸை ‘டாடா’ நிறுவனம் வாங்குகிறது?

கொழும்பு, மே 10

சிறீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை இந்தியாவின் டாடா நிறுவனம் வாங்கவுள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை இந்தியாவின் ‘டாடா’ நிறுவனத்துக்கு மாற்றுவது தொடர்பில் அரசாங்க தலைவர்களுக்கு இடையில் கலந்துரையாடல் இடம்பெற்று வருகிறது என்று துறைமுகங்கள், கடற்படை மற்றும் வானூர்தி சேவைகள் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தியாவின் மிகப் பெரிய வணிகக் குழுவான ‘டாடா’ நிறுவனம், எயார் இந்தியா நிறுவனம் உள்ளிட்ட பல வானூர்தி நிறுவனங்களின் வணிகத்தை தொடர்ந்து நடத்தி வருகிறது. இந்த நிறுவனம் சிறீ லங்கன் எயார்லைன்ஸ் மீதும் கவனம் செலுத்தி வருகிறது என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களில் சிறீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனமும் ஒன்று என்பதுடன் அந்த நிறுவனத்தை மறுசீரமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-சி)

## இந்திய...

இதன்போது, வடக்கு - கிழக்கு மாகாணங்களின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியை ஒன்றாக சந்தித்துப் பேசுவது குறித்து இந்தியத் தூதரக தரப்பு வரவேற்பு தெரிவித்தது என்றும் - 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அதிகம் கவனம் செலுத்தப்பட்டது எனவும் அறிய வருகின்றது. (ஐ)

## வடக்கு...

வலியுறுத்தினார்.

அவரின் இந்த வலியுறுத்தலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொண்டார். அத்துடன், வடக்கு, கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை தனித் தனியாக சந்திக்கும் திட்டத்தை கைவிடுவதாகவும் நாளை வியாழக் கிழமை ஆரம்பமாகும் பேச்சில் வடக்கு, கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை பங்கேற்க தனித்தனியாக அழைப்பு விடுக்கப்படும் என்று ஜனாதிபதி இதன்போது உறுதியளித்தார்.

இதைத் தொடர்ந்து, நாளை ஆரம்பமாகும் பேச்சுகளில் பேசப்பட வேண்டிய விடயங்கள் குறித்து தெரிவிக்கப்பட்டது. நாளை வியாழக்கிழமை வடக்கு, கிழக்கு காணிப் பிரச்னை உட்பட தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து பேசப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அரசியல் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணும் விதமாக அதிகாரப் பகிர்வு குறித்துப் பேசப்படும் என்றும் அவர் கூறினார்.

தொடர்ந்து மறுநாளான 13ஆம் திகதி சனிக்கிழமை வடக்கு மாகாண அபிவிருத்தி குறித்துப் பேசப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட இரா. சாணக்கியன் எம். பி., கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பில் கேள்வி எழுப்பினார்.

அவருக்கு பதிலளித்த ஜனாதிபதி, ஏற்கனவே திட்டமிடப்பட்ட விடயம் என்பதால் வடக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பிலேயே ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த சாணக்கியன் எம். பி., கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பிலும் ஆயத்தப்படுத்தப்பட்ட பின்னர் இரு மாகாணங்களின் அபிவிருத்தி தொடர்பாகவும் பிறிதொரு நாளில் ஒருசேர பேசுவோம் என்று தெரிவித்தார். இதனை தமிழரசு கட்சியினரும் ஆமோதித்தனர்.

ஜனாதிபதியும் இணக்கம் தெரிவித்த நிலையில், அன்றைய தினப் பேச்சு பிறிதொருநாளுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பித்த இந்த சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது. இதில், தமிழரசு கட்சியின் பெருந் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன், கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், சி. சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், இரா. சாணக்கியன், த. கலையரசன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## உலக வங்கியிடம் 200 மில். டொலர் கடன் பெற அமைச்சரவை அனுமதி

கொழும்பு,மே 10

இலங்கையில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக் காக 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுக்காக உலக வங்கியுடன் கலந்து ரையாடுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நிதியமைச்சர் என்ற வகை யில் ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்கவினால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டது.

## விபத்தில்...

னார் என்று அறிய வருகின்றது.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் புளியம்பொக்கணை பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் அதே இடத்தை சேர்ந்த 18 வயது இளைஞரே உயிரிழந்தார். மற்றொருவர் காயங்களுக்கு இலக்காகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேசமயம், இந்த விபத்தின்போது இரு மாடுக ளும் உயிரிழந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இலங்கைக்கான...

கியது. இந்தக் கடன் எல்லை கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடையும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த கடன் எல்லை வசதியில் சுமார் 350 மில்லியன் மீதமுள்ளன என்றும் அவை தேவைக்கேற்ப பயன்படுத்தப்படலாம்” என்று அவர் கூறியுள்ளார். எனினும், சந்தையில் அந்நிய செலாவணியின் கிடைப்பனவு அதிகரித்துள்ள நிலையில், கடந்த ஆண்டை விட தேவை அதிகமாக இல்லையென்றும் அவர் தெரிவித்தார்.

இதுவரை முக்கியமாக மருந்துகள் மற்றும் உணவுக்காக பயன்படுத்தப்பட்ட இந்தக் கடன் வசதியை நீடிக்க இலங்கை இந்தியாவுடன் பேச்சு நடத்தி வந்தது. இந்தநிலையில், தற்போது குறித்த கடன் வசதியை இந்தியா நீடித்துள்ளதாக திறைசேரியின் பிரதி செயலாளர் ரொய்ட்டர்ஸ் செய்தி சேவையிடம் தெரிவித்துள்ளார். (ஐ)

## பயங்கரவாத...

ஏற்படுத்துதல் உள்ளிட்ட 5 விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சித்திரவதைகள் மற்றும் காணாமல் ஆக்கப்படுவதை தடுக்கும் நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்தல், நீதியான வழக்கு விசாரணையை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். புனர்வாழ்வு சட்டமூலத்தில் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தங்கள், இலங்கையின் அரசமைப்பு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களுக்கு முழுமையாக பொருந்தவில்லை - என்றும் அறிக்கையாளர்கள் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# அவுஸ்திரேலியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட 41 பேர்!

கொழும்பு, மே 10

**அவுஸ்திரேலிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்ட, சட்டவிரோதமாக இலங்கையிலிருந்து குடிபெயர்ந்த 41 பேர் நேற்று காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.**

அவர்கள் பல நாள் மீன்பிடி இழுவைப் படகுகளில் கடல் வழியாக பயணம் செய்து அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முயற்சித்த போது அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் அவர்கள் நாடு கடத்தப்படாமல் கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இவர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணம் மற்றும் வாழைச்சேனை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதரகத்தின் மூன்று சிரேஷ்ட அதிகாரிகள், இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளிடம் இந்த குழுவை ஒப்படைப்பதற்காக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்குச் சென்றிருந்தனர்.

தேசிய புலனாய்வு அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (அ)

# மே 9 சம்பவத்தை நினைவு கூரும் ஆர்ப்பாட்டங்களுக்கு மன்று தடை

கொழும்பு, மே 10

கடந்த வருடம் மே 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகளை நினைவு கூரும் வகையில் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதன்படி, ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், நிதியமைச்சு மற்றும் அலரிமாளிகை ஆகியவற்றுக்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் செல்வதைத் தடுக்கும் வகையில் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022 மே 9 ஆம் திகதி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரரும், அப்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் பதவி விலகவேண்டுமெனக் கோரி, அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிகளில் இறங்கினர்.

கொழும்பில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது அரசாங்க ஆதரவுக் குழுவினர் தாக்குதல் நடத்திய பின்னர், ஆளுங்கட்சி உறுப்பினர்களின் தனிப்பட்ட வீடுகள் மற்றும் சொத்துக்கள், அரச எதிர்ப்பாளர்களால் தீக்கிரையாக்கப்பட்டதுடன், நாடு முழுவதும் வன்முறை பரவியது. (அ)

# வெதுப்பக உற்பத்திகளின் விலை அதிகரிக்கப்படாது

கொழும்பு, மே 10

இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளபோதிலும், வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என் கே ஜயவர்தன இதனை தெரிவித்தார்.

கோதுமை மாவினை இறக்குமதி செய்யும் இரு பிரதான நிறுவனங்கள் விலையை அதிகரிக்காத நிலையில், வெதுப்பக உரிமையாளர்கள் சங்கமும் விலையை அதிகரிக்கப் போவதில்லை.

கோதுமை மாவை இறக்குமதி செய்யும் இரு நிறுவனங்களிடமிருந்தும் 215 மற்றும் 210 ரூபாவுக்கு ஒரு கிலோகிராம் கோதுமை மா கிடைக்கப்பெறுவதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# இலங்கை வந்துள்ள அ.தி.மு.க. குழுவினர் அமைச்சர் ஜீவன் தொண்டமானுடன் சந்திப்பு



கொழும்பு, மே. 10

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தமிழகத்தின் முன்னாள் செய்தித்துறை அமைச்சர் கடம்பூர் செ.ராஜூ தலைமையிலான அதிமுக குழுவினர், நேற்று முன் தினம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானை கொழும்பில் உள்ள அமைச்சகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

மரியாதை நிமித்தம் நடைபெற்ற இந்த சந்திப்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், இலங்கை - இந்திய சமூதாய பேரவையின் சார்பில் சிவராமன் மற்றும் காந்தி ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

எம்.ஜி.ஆர். அறக்கட்டளை மூலம் முன்னெடுக்கப்படும் பணிகள் தொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமானிடம் எடுத்துரைத்த அவர்கள், இலங்கை மக்களுக்கும் சேவை செய்ய தயாராக இருப்பதாக தமது விருப்பத்தை வெளியிட்டனர்.

இதற்கமைய மலையக பகுதிகளுக்கு நேரில் விஜயம் செய்து, மக்களுடன் கலந்துரையாடவுள்ளனர்.

மேற்படி குழுவினரால் மக்களுக்காக உதவி திட்டங்களை முன்னெடுக்கும் பட்சத்தில் அதற்கான முழு ஒத்துழைப்பையும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வழங்கும் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதன்போது தெரிவித்தார். (அ)

# பெண்ணொருவர் வெட்டிக்கொலை!

## சகோதரனும் சகோதரியும் கைது

கொழும்பு, மே 10

பாதுக்கை, வட்டரெக்க பகுதியில் உள்ள வாடகை வீடொன்றில் கட்டடப் பணியாளர் ஒருவருடன் வசித்து வந்த காதல் மனைவி எனக் குறிப்பிடப்படும் பெண்ணொருவரை கொலை செய்துவிட்டு தப்பிச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரனும் சகோதரியும் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பெண் சந்தேக நபர் குறித்த கட்டட பணியாளரின் முன்னாள் மனைவி என்றும் மற்றையவர் அவரின் தம்பி என்றும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பெண் சந்தேகநபர் கட்டடப் பணியாளரை விவாகரத்துச் செய்து சுமார் மூன்று வருடங்கள் ஆவதாகவும், அதனால் தான் வேறு ஒரு பெண்ணுடன் வாழ்ந்து வந்ததாகவும் கட்டிடப் பணியாளர் வழங்கிய சாட்சி யத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித் தனர்.

நேற்றுக் காலை குறித்த கட்டடப் பணியாளர் வேலைக்காக வீட்டை விட்டு வெளியேறிய பின்னர் சந்தேக நபர்களான முன்னாள் மனைவியும் அவரது தம்பியும், வீட்டுக்குச் சென்று கொலையுண்ட பெண்ணிடம் பேசி, வீட்டுக்கு வெளியே அழைத்து வந்து கூரான கத்தியால் தாக்கிக் கொலை செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், வலஸ்முல்ல, கட்டுவன, அலுபொத்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த விவாகரத்துப் பெற்ற 52 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார். (அ)



# முள்ளிவாய்க்கால் கஞ்சி நேற்று மருதனார்மடத்தில்

யாழ்ப்பாணம், மே 10

'வலி சுமந்த காலத்தில் உயிர்காத்த முள்ளிவாய்க்கால் கஞ்சி' வரலாற்றை இளைய சமுதாயத்திற்கு கடத்தும் நோக்கில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்திட்டம் வல்வெட்டித்துறை ஆலடிச் சந்தியில் நேற்றுக் காலை ஆரம்பமானது.

இந்நிலையில் அதன் தொடர்ச்சியாக நேற்று மதியம் மருதனார்மடம் சந்தியில் யுத்தத்தில் உயிர்நீத்த உறவுகளை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் பொதுமக்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிர்ந்தளிக்கப்பட்டது.

அதேவேளை, முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை தொடர்பான விடயங்களை அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கேள்வி குறைந்துள்ளமையினால் மின் கட்டணத்தை குறைக்கலாம்

கொழும்பு, மே 10

மின் கட்டண அறவீட்டை நூற்றுக்கு 20 சதவீதத்தால் குறைக்கவேண்டும் என இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்குரிய மின்சாரத்தின் தேவை குறித்து இலங்கை மின்சார சபை சில முன்வைத்த அளவைவிட குறைவான மின்சாரமே தேவைப்படுவதாக ஜனக்க ரத்நாயக்க குறிப்பிட்டார்.

இதனால் மின் கட்டண அறவீட்டை நூற்றுக்கு 20 வீதமாக குறைக்க முடியும் என ஜனக்க ரத்நாயக்க கூறினார். (அ)

# ரூபாவின் பெறுமதி உயர்வு

கொழும்பு, மே 10

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்பில் மத்திய வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

இதன்படி, நேற்று முன் தினத்துடன் ஒப்பிடும்போது டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி நேற்று சற்று அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நேற்றைய நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 325.95 ரூபாவாகவும், கொள்வனவு விலை 311.00 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.